பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 18 வெள்ளிக்கிழமை (30-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 157

## ஜூன் இறுதியில் சமாதானப் பேச்சு ஆரம்பம் என்கின்றார் கதிர்காமர்

புதுடில்லி,ஏப்.30

இடைநிறுத்தப்பட்டிருக்கும் - புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஜூன்மாத இறுதியில் தொடங்கலாம் என்று இலங்கை அரசு கருதுகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கான நடைமுறை ஏற்பாடுகளை வகுத்துக்கொள்ளும் விடயமே அந்த சமாதானப்பேச்சின் முக்கிய அம்சமாக இருக்கும்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவில் வைத்து இவ்வாறு தகவல் வெளியிட்டார் என யு.என்.ஐ.செய்தி ஒன்று தெரிவித்தது.

இரண்டு தசாப்தகால இனப் போருக்கு இணக்கமான - நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சுகளை ஆரம்பிப்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் விடுதலைப் புலிகளும் மிகுந்த ஆர்வமாக இருக்கின்றார்கள் எனக் கதிர்காமர் கூறி

(14ஆம் பக்கம் பார்க்க)

## அனலைதீவில் கைதான 22 இளைஞர்களும் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.30

அனலைதீவில் உள்ள ஈ.பி.டி.பி. முகாம் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அப்பகுதியைச்சேர்ந்த 22 இளைஞர்களையும் பிணையில் செல்ல ஊர்காவற்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் நேற்று அனுமதித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைககப்பட்டுள்ள 13 இளைஞர்களையும் பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா கடந்த தவணையின்போது கோரியிருந்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக தேடப்படும் மேலும் 9 பேர் நீதிமன்றில் ஆஜராகும் பட்சத்தில் இவர்களைப் பிணையில் விடுவது தொடர்பாக பரிசீலனை செய்யமுடியும் என்று நீதிவான் அப்போது தெரிவித்திருந்தார்.

இதன்படி பொலீஸாரால் தேடப்பட்டு வந்த 9 பேரும் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மூலம் நேற்றுக்காலை நீதிவான் முன் சரணடைந்தனர்.

இவர்களை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று வாக்குமூலத்தைப் பதிவுசெய்த பின் மீண்டும் நண்பகல் நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் பொலீஸாருக்குத் தெரிவித்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்குச் சம்பவம் யுத்தநிறுத்த மீறல்

# அதுவே கண்காணிப்புக்குழுவின் கருத்து

## புருஹொவ்டே ஊடாக அரசுக்கு புலிகள் ஆட்சேபம் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஏப்ரல்30

**ஆயித்தியமலைத் தாக்குதல் சம்பவம் ஒரு யுத்தநிறுத்த மீறல் என்பதை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த விடயம் குறித்து அவர்கள் தீவிர விசாரணை நடத்திவருகிறார்கள். இது ஒரு முழு அளவிலான யுத்தநிறுத்த மீறல் என்பதால் எமது கடுமையான ஆட்சேபத்தைக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஊடாக அரசுக்குத் தெரிவித்திருக்கின்றோம்.**

**நேற்று கிளிநொச்சியில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்தபின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.**

கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புருஹொவ்டே தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

காலை 11.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை அவர்கள் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

அச்சந்திப்பின் பின்னர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்ததாவது:-

*கேள்வி:* இன்றைய பேச்சுக்களில

(14ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தத்தைத் தொடர புதிய அரசும் புலிகளும் உறுதி!

### கண்காணிப்புக்குழுத் தலைவர் நம்பிக்கை

கிளிநொச்சி,ஏப்.30

யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் செம்மையாக முன்னெடுக்க அரசும், விடுதலைப் புலிகளும் உறுதியாக இருக்கின்றனர் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புருஹொவ்டே தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பை அடுத்து செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக்கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-

தற்போதுள்ள சூழ்நிலையில் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் என்னவகையில் அமையவேண்டும் என்பது குறித்துக் கலந்துரையாடினோம்.

எதிர்வரும் காலங்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு எவ்வாறு செயற்படுவது, யுத்த நிறுத்த உடன்பாட்டை எப்படிச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது என்பன குறித்தும் விரிவாக ஆராய்ந்தோம்.

எமது பணிக்கும் இருதரப்பினரும் ஒத்துழைப்பர் என நிச்சயமாக நம்புகிறோம் - என்றார் அவர். (எ-3-ரி)

## உயர் பாதுகாப்பு வலயத்தைக் காட்டி மீள்குடியமர்வைத் தடுக்கக்கூடாது!

### அடித்துக் கூறுகிறார் அகதிகளுக்கான ஐ.நா. அதிகாரி

கொழும்பு,ஏப்.30

"யாழ் குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளைக் கைக்கொள்ளுங்கள்.

பாதுகாப்பு விடயங்கள் பற்றிப்பேசும் வரை இடம்பெயர்ந்த மக்களைக் காத்திருக்குமாறு கேட்டுக்கொள்வது பொருத்தமற்றது."

"இடம்பெயர்ந்த மக்களுக்கான தீர்வு முயற்சிகளுக்கு உயர் பாதுகாப்பு வலயம் தடையாக இருக்க முடியாது"

- இவ்வாறு அடித்துக் கூறியிருக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### தமிழருக்கு எதிரான கலவரம் வெடித்த

## கந்தப்பொலவில் ஊரடங்கு நீடிப்பு!

நுவரெலியா,ஏப்.30

மலையகத் தமிழர்களுக்கு எதிராகப் பெரும் கலவரம் வெடித்த கந்தப்பொலப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் பிரகடனப்படுத்தப்பட்ட பொலீஸ் ஊரடங்கு தொடர்ந்து நீடிக்கப்பட்டிருக்கிறது. இன்று காலையிலாவது ஊரடங்கு நீடிக்கப்படுமா எனத் தெரியவில்லை.

அங்கு நேற்றுக்காலையும் தமிழர்களுக்கு எதிராகத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. அதில் இரு தமிழர்கள் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகலுக்குப்பின் - முன்னிரவு வரை தகாத சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றதாகத் தகவல் இல்லை.

ஆனால், அங்கு தமிழர், சிங்களவர் ஆகிய இருதரப்பினரிடையேயும் அமைதியை நிலைநாட்டி நல்லுறவை ஏற்படுத்த எடுக்கப்பட்ட சமரச முயற்சிகள் இன்னும் பலனளிக்கவில்லை. அதனால், இன்று விடிந்ததும் என்ன நேருமோ என்ற அச்சம் நீடிக்கின்றது.

கந்தப்பொலவிலும் சுற்றுப்புறத் தோட்டங்களிலும் நேற்றுமுன்தினம் இரவு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவரே உயிரிழந்தனர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கலவரப் பகுதிக்கு பிரதமர் விஜயம் ஆனால், சமரசம் ஏற்படவில்லை!

### பொலீஸ் காவல் நிலையத்தை அகற்றத் தமிழர் வற்புறுத்து

கொழும்பு,ஏப்.30

கலவரத்தில் பாதிக்கப்பட்ட கந்தபொல பகுதிக்கு ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று விஜயம் செய்தார்.

அங்கு மஹிந்த வித்தியாலயத்தில இடம்பெற்ற - அனைத்து இன, மதப் பெரியார்களுடனான - கலந்துரையாடலில் அவர் தலைமை தாங்கி சில கருத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் அசமந்தம்; படையினர் பாரபட்சம்!!

கொழும்பு,ஏப்.30

கந்தப்பொலவில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது பொலீஸார் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால் நிலைமை மோசமடையாமல் கட்டுப்படுத்தியிருக்கலாம் என்றும் -

பாதுகாப்புப் படையினர் சிறுபான்மையினரான மலையகத்தமிழர்களுக்கு எதிராக - பாரபட்சமான முறையில் - செயற்பட்டனர் என்றும் -

கந்தப்பொல பிரதேச தமிழ் மக்கள் கடும் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழ் மக்களின் கடைகள், வீடுகள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடந்த சமயம் கண்டும் காணாமல் மௌனம் பேணிய படைத்தரப்பினர், பின்னர் கொதித்தெழுந்து தோட்டப் பகுதி மக்கள் மீது கண்ணீர்ப்புகைக்

(14ஆம் பக்கம் பார்க்க)


ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.
— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.



NSB
NSB
தேசிய சேமிப்பு வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் தெரிவில் ஏற்பட்ட தோல்விக்கு பழிவாங்கும் செயலே கந்தப்பொல கலவரம்

## சுரேஷ் எம்.பி. அரசின் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.30

சபாநாயகர் தெரிவின் போது மலையகத் தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்க ளிக்காததற்கு பழிவாங்கும் சம்பவமே கந்தப் பொலவில் இடம்பெற்றிருக்கின்ற இனக்கலவரம்.

இவ்வாறு குற்றம்சுமத்தியிருக்கிறார் தமிழ்க்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் (சுரேஷ் அணி) செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்தக் கலவரம் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிகையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நுவரெலியா கந்தப்பொலவில் ஏற்பட்ட இனக்கலவரமானது அரச அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட செயலோ என்ற எண்ணம் தமிழர்மனதில் தோன்றியுள்ளது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவுக்கு மலையகத் தமிழ்க்கட்சிகள் ஒத்துழைக்கத் தவறியமைக்கு அரசு கொடுக்கும் தண்டனையோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

கலவரத்தை அடக்க முற்பட்ட பொலீஸாரல் தமிழரைக் கொலை செய்யவும், காயப்படுத்தவும்தான் முடிந்துள்ளது. 1977 இலும் சிங்களக் காடையர்களுக்கு ஆதரவாக இராணுவமும், பொலீஸும் செயற்பட்டன. அதனைப் போன்றே கந்தப்பொலவிலும் பொலீஸார் சிங்களக் காடையரை அடக்குவதற்கு பதிலாக அப்பாவித் தமிழ மக்களைக் கொன்றுள்ளனர். தமிழ் மக்களின் லயன்களில புகுந்து அட்டகாசம் பண்ணியவர்கள் எதுவித சிரமமுமில்லாமல் தப்பிச் சென்றுள்ளமையானது காடையவர்களுக்கு பொலீஸார் வழங்கிய ஒத்துழைப்பையே காட்டுகின்றது.

தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பளிக்க அரசாங்கத்தாலோ, ஜனாதிபதியாலோ முடியாவிட்டால் அதனை வெளிப்படையாகக் கூறினால் நாம் சர்வதேச சமூகத்திடம் இருந்து பாதுகாப்பைக் கோரலாம்.

சிங்கள பௌத்த இனவாதமும், காடைத்தனமும், தமிழருக்கு எதிராக ஏவப்பட்டால், தமிழ்மக்கள் மிரண்டு ஒதுங்கி விடுவார்கள் என்றோ அல்லது அரசிடம் சரணாகதி அடைந்து விடுவார்கள் என்றோ அரசு சிந்தித்தால் அது தவறு என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

உண்மையாகவே யுத்தமற்ற, அமைதியான நாடொன்றை இந்த அரசாங்கம் விரும்பினால், இப்படியான காடைத்தனங்களுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இறந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் தகுந்த நஷ்டஈட்டை அரசு உடன் வழங்குவதுடன் நடைபெற்ற சம்பவத்துக்கு அரசு தமிழ்மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# மணல் ஏற்றிவரும் அனுமதியை பிரதேச சபை வழங்கமுடியாது

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் வழங்கிய அனுமதிப்பத்திரத்துடன் லொறியில் எடுத்துவரப்பட்ட மணல் சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியத்தின் உத்தரவின் பேரில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபரின் அனுமதிப்பத்திரத்துடன் ஏற்றிவரப்பட்ட மணல் பறிமுதல் செய்யப்பட்டதாக கடந்த 27 ஆம் திகதி பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

பிரதேச சபை செயலாளரின் அனுமதிப்பத்திரத்துடன் மணல் எடுத்து வரமுடியாது என்றும் -

அதன் காரணமாக அவரின் அனுமதிப்பத்திரத்துடன் எடுத்துவரப்பட்ட மணலே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது - என்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-3)

# பற்றைகளை வெட்டி அகற்றியோர் மிதிவெடி வெடித்ததில் படுகாயம்!

## நெடுங்குளத்தில் நேற்றுக் காலை சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

குடியிருப்புக்காணியில் பற்றைகளை வெட்டியகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் இருவர் மிதிவெடி வெடித்ததில் படுகாயம் அடைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று அரியாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நிலத்தில் படர்ந்திருந்த செடிகளை மண்வெட்டியால் வெட்டிஅகற்றிக் கொண்டிருந்தபோதே மிதிவெடி வெடித்ததாகக் கூறப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியளவில் அரியாலை - நெடுங்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்தவர்களான வேலுப்பிள்ளை யோகநாதன் (வயது 54), ந.கிருஸ்ணமூர்த்தி (வயது 45) என்ற இருவருமே முகம் மற்றும் கால் பகுதிகளில பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-6-ரி-86)

## மின்னல் தாக்கி மீனவர் மரணம்!

பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கப் படகொன்றில் கடந்த செவ்வாய் அதிகாலை சென்ற இரு மீனவர்கள் மீது மின்னல் தாக்கியதினால் ஒருவர் மரணமானார். மற்றொரு மீனவர் காயங்களுடன் நாகொட ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பேருவளை, மாகல்கந்த பகுதியைச் சேர்ந்த செபஸ்ரியன் (வயது 60) என்னும் மீனவரே மின்னல் தாக்கி மரணமானவர் ஆவார். ம.ஜோசப் பெர்ணாடோ (வயது 50) என்பவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பேருவளை திடீர் மரண விசாரணை அதிகாரி என்.எம்.முஸம்மில் மாவட்ட ஆஸ்பத்திரியில் இரைது மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்தினார்.



நேற்றைய சந்திப்புக்கு வருகை தந்த கண்காணிப்புத் தலைவர் ட்ரொன் புருஹொவ்டேயை கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் வைத்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் சந்திப்பில் கலந்துகொண்ட இரு தரப்பு பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## பிப்பிலி மயானத்தில் சிரமதானப் பணிகள்

மானிப்பாய்,ஏப்.30

மானிப்பாய் பிப்பிலி மயானம் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் பிரதேசபை ஊழியர்களும் யாழ்.மாவட்ட சாயி நிலைய தொண்டர்களும் இணைந்து மேற்படி சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று ஆரம்பமான இந்த சிரமதானப்பணி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது என்று வடபிராந்திய சதிய சாயி நிலைய இணைப்புக்குழுத் தலைவரும், மானிப்பாய் சுகாதார சமூக, சுற்றாடல் விவகார சபைத்தலைவருமான இரா.வசந்தசேனன் தெரிவித்துள்ளார். (எ-4-90)

### அரியாலையில் தொடரும் மோதல்கள்:

# பொலீஸார் மெத்தனம்; பொதுமக்கள் விசனம்!

யாழ்ப்பாணம்,ஏப்.30

அரியாலைப் பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக இரு குழுக்களிடையில் இடம்பெற்றுவரும் கோஷ்டி மோதல் சம்பவங்களை கட்டுப்படுத்தப் பொலீஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய நடவடிக்கை எடுக்கவில்லையென அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். அரியாலை மற்றும் நாயன்மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கோஷ்டி மோதலாக வெடித்தது.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக பொல்லுகள், தடிகள் மற்றும் கத்தி, வாள் போன்ற ஆயுதங்கள் கொண்டு இந்த மோதல் தொடர்ந்து வருகின்றது.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் அரியாலைப் பகுதியில் உள்ள சில வீடுகள் அடித்து உடைக்கப்பட்டும் உள்ளன. இதேநேரம் இரவு நேரங்களில் பொதுமக்கள் இப்பகுதிகள் ஊடாகப் பயணஞ்செய்வதற்குக் கூடப் பயந்து வேறு பாதைகளூடாக சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்படி மோதலைக் கட்டுப்படுத்துவதற்கு பொலீஸாரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிவிட்டனர் என்று பொதுமக்கள் தெரிவித்திருக்கின்றனர். (எ-4-68)

# சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 12 பேருக்குச் சுமார் 2 லட்சம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

ஏழாலை, குப்பிளான் மற்றும் இணுவில் பகுதிகளில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற 12 பேருக்கு மல்லாகம் நீதிமன்றினால் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் சுன்னாகம் அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் குழு ஒன்று கடந்த புதன்கிழமை இரவு சுன்னாகம் பொலீஸார் சகிதம் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மல்லாகம் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து 12 பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மகாலிங்கம் இராஜகுமாரி(ஏழாலை கிழக்கு), பெரியதம்பி வீரகாந்தன் (குப்பிளான்), முருகையா ஜீவராணி(இணுவில் மேற்கு), சரவணமுத்து கந்தசாமி(குப்பிளான் கிழக்கு), இராசையா பரஞ்சோதி (ஏழாலை), மார்க்கண்டு மகேந்திரராசா(ஏழாலை மேற்கு)

இராசா நித்தியானந்தம்(ஏழாலை கிழக்கு), அப்பாத்துரை விஜயகுமார் (ஏழாலை கிழக்கு), தம்பியப்பா இராசலிங்கம் (ஏழாலை வடக்கு), சுந்தரம்பிள்ளை விஜயகுமார் (குப்பிளான்), செல்வநாயகம் குணரத்தினம் (குப்பிளான்), குட்டித்தம்பி கனகசுந்தரம் (குப்பிளான்) ஆகியோரே மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர். (எ-10)

# தகவல் தொழில்நுட்பப் பூங்காவை புனரமைக்க அமைச்சு முடிவு

## யாழ்.செயலகத்திடம் அறிக்கை கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அபிவிருத்தி செய்வதற்கான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி இந்துகலாசார, தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்தி, மற்றும் வடக்கு தொழில்பயிற்சி அமைச்சு யாழ்.செயலகத்தைக் கேட்டுள்ளது.

இந்தப் பூங்கா தமது அமைச்சின் கீழ் வருகின்றது என்றும் - எதிர்காலத்தில் இப்பூங்காவை அபிவிருத்தி செய்து சீரான பணிகளை முன்னெடுக்க தமது அமைச்சு முடிவு செய்துள்ளது என்றும் - அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அபிவிருத்தி செய்ய ஆலோசனைகளுடன் கூடிய அறிக்கையை அனுப்புமாறு செயலகத் திட்டமிடல் பணிப்பாளரை அமைச்சு கேட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பப் பூங்கா வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையால் அமைக்கப்பட்டது. அந்தச் சபை இயங்காது போனதை அடுத்து யாழ்.செயலகத்தின் பொறுப்பில் இந்தப் பூங்கா இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.30

நாட்டுப்பற்றாளர் வி.ரி.ஏ.விஸ்வா வெற்றிக்கேடயத்திற்காக பூங்கனிச் சோலையின் ஆதரவில் திருநெல்வேலி ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கரபபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை எல்லாளன் விளையாட்டுக்கழக அணி எதிர் வள்ளுவன விளையாட்டுக்கழக 'பி' அணியும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை விநாயகர் விளையாட்டுக்கழக அணி எதிர் இமையாளன் விளையாட்டுக்கழக 'பி' அணியும் மோதவுள்ளன.

### மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து

# தென்மராட்சி தெற்கில் கிணறுகளை இறைத்துத் துப்புரவாக்கும் படையினர்

தென்மராட்சி,ஏப்.30

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, கைதடி நாவற்குழி வடக்கு ஆகிய பிரிவுகளில் அண்மையில் மக்கள் மீளக் குடியமர்ந்த காணிகளில் உள்ள கிணறுகள் படையினரால் இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மறவன்புலோ முகாமில் பதிவு செய்தால கிணறுகள் இறைத்துக் கொடுக்கப்படும் என படைத் தரப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நேற்று முன்தினம் மறவன்புலோ மேற்குப் பகுதி தோட்டக் காணியொன்றில் கிணறு இறைத்த போது வெடிக்காத நிலையில் 16 ஷெல்கள் கிணற்றுக்குள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நேற்று அவற்றினை மீட்க படையினர் நடவடிக்கை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தினை படையினர் மீளக் கைப்பற்றிய போது அப்பகுதியில் வெடிக்காத, பயன்படுத்தாத நிலையில் காணப்பட்ட வெடிபொருள்கள் அங்குள்ள கிணறுகளில தற்பாதுகாப்புக்காக போடப்பட்டதாகவும் -

மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் பிரிவுகளில் உள்ள கிணறுகளில் வெடிக்காத ஷெல்கள் காணப்படலாம் என்பதால் கிணறுகளை இறைத்துக் கொடுக்கத் தாம் முன் வந்துள்ளதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# வடமேல் மாகாண ஆளுநராக ரெஜி ரணதுங்க நியமனம்?

வடமேல் மாகாண புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்கவை நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார் எனத் தெரிகின்றது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், எம்.பியுமான அர்ஜுன ரணதுங்கவின் தந்தையான ரெஜி ரணதுங்க கடந்த தேர்தலில ஐ.ம.சு. கூட்டமைப்பின் சார்பில் கம்பஹா தொகுதியில் போட்டியிட்டுத் தோற்றவர்.

வடமேல் மாகாண ஆளுநராக இருந்த ஜயவீரவின் பதவிக்காலம் இவ்வருட ஆரம்பத்துடன் முடிவுற்றது. எனினும் இப்பதவிக்காலத்தை மூன்று மாதத்தால் ஜனாதிபதி நீடித்திருந்தார். (எ-க)

# எதிர்வரும் ஜூன் மாத முற்பகுதியில் அரிந்த மரங்கள் எடுத்து வரப்படும்

## கூட்டுத்தாபன அதிகாரி தகவல்

தென்னிலங்கையிலிருந்து அரிந்த மரங்களைக் குடாநாட்டுக்கு எடுத்து வரும் செயற்பாடுகளை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வடமாகாணப் பிராந்தியப் பணிமனை மேற்கொண்டுள்ளது..

- இவ்வாறு தெரிவித்தார் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் க.விஜயரட்ணம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கை வனங்களில் மரங்கள் வெட்டுவதில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக அரிந்த மரங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதில் தடைகள் ஏற்பட்டன. இம்மாதம் தொடக்கம் தென்னிலங்கையில் வனங்களில் மரங்கள் வெட்டப்படுகின்றன அந்த வகையில் எதிர்வரும் ஜூன் மாத முற்பகுதியில் அரிந்த மரங்கள் தென்னிலங்கையில இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்றார் அவர். (ஒ-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிதிவெடி அகற்றலை விரைவுபடுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

## நோர்வே சமூக மைய ஆய்வாளர் கிறிஸ்ரியன் உறுதி

யாழ்ப்பாணம்,ஏப்.30

இலங்கையில் மிதிவெடி அகற்றும் செயற்பாட்டை மேலும் அதிக வினைத் திறனுடன் மேற்கொள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன - நோர்வே நாட்டைச் சேர்ந்த ·'வாவ்வோ' என்ற சமூக ஆய்வு மையத்தின் ஆய்வாளர் கிறிஸரியன் ரூச் இவ்வாறு கூறினார்.

நிலக்கண்ணி அகற்றும் பணிகளை, சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டோடு எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்த இரண்டுநாள் ஆய்வுப் பட்டறை கடந்த செவ்வாய், புதன் ஆகிய இருநாள்களும் யாழ். வர்த்தக கைத்தொழில்மன்ற அலுவலகக் கூடத்தில இடம்பெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த கிறிஸ்ரியன் ரூச் உதயன் செய்தியாளரிடம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பில் மிதிவெடி அகற்றும் பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இது பொதுமக்களுடைய வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானதும் பிரயோசனமானதுமான செயற்பாடாகும்.

பொதுமக்களுடைய வாழ்விடங்களைப் பாதுகாப்பானவையாகப் பெறுக்கொடுப்பதன் மூலம் அவர்களின் இயல்புவாழ்க்கை உத்தரவாதப்படுத்தப்படுகிறது. இதனால், சமாதானத்தின் மூலமான பெறுபேறுகளை அவர்கள் அனுபவிக்கமுடிகிறது - என்றார் அவர்.

இலங்கைத் தேசியச் சமாதானப் பேரவை, நோர்வேயின் ·'.வாவ்வோ' அமைப்பு மற்றும் பிரிட்டனின் சர்வதேச மிதிவெடியகற்றும் அமைப்பு ஆகியன இணைந்து மேற்படி ஆய்வுப்பட்டறையை ஒழுங்குசெய்திருந்தன. இதில் வடமாகாணத்தில் நிலக்கண்ணி அகற்றலில் செயற்படும் அனைத்து அமைப்புக்கள், சமூக அபிவிருத்தி அமைப்புகள், சர்வமதங்களுக்கு இடையிலான சமாதான அமைப்பு மற்றும் மனிதநேய அமைப்புகள் எனப் பலவும் கலந்துகொண்டிருந்தன. அத்துடன், சூடான் நாட்டைச் சேர்ந்த சமாதான ஆர்வலர் முஹமட் பவுஸ"ம் கலந்துகொண்டிருந்தார்.

மிதிவெடி அகற்றும் பணிகளில் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய இயலளவு குறித்தும் -

எதிர்காலத்தில் நிலக்கண்ணிப் பயன்பாட்டை முற்றாகத் தவிர்ப்பது தொடர்பான செயற்றிட்டங்கள் குறித்தும் -

இந்தச் செயற்பாடுகளின் ஊடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் எவ்வாறு காத்திரமான பங்களிப்பைச செய்யமுடியும் என்பது குறித்தும் இந்த ஆய்வுப் பட்டறையில் ஆராயப்பட்டது.

இந்த ஆய்வின் நோக்கம் தொடர்பாகத் தேசியச் சமாதானப் பேரவையின் பணிப்பாளர் எஸ்.பாலகிருஸ்ணன் தகவல்தருகையில் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுளஎன. அத்துடன், எதிர்காலத்தில் மிதிவெடிப் பாவனையை அரசு மற்றும் புலிகள் உள்ளிட்ட அனைத்துத தரப்பினரும் நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. இதன்மூலம் மக்களின் சமாதான வாழ்வு உறுதிப்படுத்தப்படும்.


மக்கள் மீளக்குடியமரவுள்ள பிரதேசம் மற்றும் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் எவ்வாறு முன்னுரிமை அடிப்படையிலேயே மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் மிதிவெடியகற்றும் பணியை மேற்கொள்வதற்காக சர்வதேச நாடுகள் நிதி உதவியை வழங்குவதில் பின்னடிக்கும் நிலையே காணப்படுகிறது. மிதிவெடிகள் போனறவற்றை அகற்றுவதற்கான சர்வதேச 'ஒட்டாவா' உடன்படிக்கையில் இலங்கை அரசும் புலிகளும் கைச்சாத்திடாதவரை இந்நிலைமை நீடிக்கவே செய்யும்.

தற்போதைய மிதிவெடியகற்றும் செயல்முறையில் பல நடைமுறைச் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

மிதிவெடி புதைக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பான சரியான தகவல்கள யாரிடமும் இல்லை. அத்துடன், கிடைத்துள்ள வரைபடங்களும் பூரணத்துவம் மிக்கவையாக இல்லை.

மேலும், பொதுமக்கள் மத்தியில் மிதிவெடி அபாயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இச்செயற்பாட்டின் முக்கியமான பணியாக உள்ளது. இந்த இரு நாள்களும் ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வுப்பட்டறையின் மூலம் மிதிவெடி அகற்றும் அமைப்புக்களிடையேயான தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இது அந்நிறுவனங்களின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறன் மிக்கவையாக்கும் - என்றார் எஸ்.பாலகிருஸ்ணன். (ஒ-9)





யாழ். வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு நாள்களும் இடம்பெற்ற மிதிவெடி அகற்றல் தொடர்பான ஆய்வுமாநாட்டில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஆய்வு மாநாட்டை ஒழுங்குசெய்த அமைப்புக்களின் பிரதிநிதிகளான தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன், நோர்வே சமூக ஆய்வு மையத்தின் ஆய்வாளர் கிருஸ்ரியன் ருச மற்றும் பிரிட்டன் சர்வதேச மிதிவெடி அகற்றும் அமைப்பின் அதிகாரி ஆகியோர் மேற்ப் படத்தில் காணப்படுகின்றனர். ஆய்வுப் பட்டறையில் கலந்துகொண்ட ஏனைய அமைப்புக்களின் பிரதிநிதிகளை கீழுள்ள படத்தில் காணலாம். *(படங்கள்: ரமா)*

# இடம்பெயர்ந்தோர் விடயத்தில் முன் அக்கறை வேண்டும்

## ஜெனிவா திரும்புமுன் 'யுனிசெவ்' அதிகாரி கருத்து

கொழும்பு,ஏப்.30

அமைதிப் பேச்சுக்களை மீண்டும ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் இந்த வேளையில் இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களின் துன்பங்களைக் களைவதற்கான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு அதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கண்காணிப்பாளர் மா அதிபர் மெக்னமாரா கூறினார். ஜெனிவாவிலுள்ள தூதரகத்தின் தலைமையகக் குழுவொன்றுக்குத் தலைமை வகித்து இலங்கை வந்திருந்த மக்னமாரா நாட்டின் பல இடங்களுக்கும் சென்று நேரடியாக நிலைமைகளைப் பார்த்தபின் பயணத்தை முடித்துக்கொள்ளும் வேளையில் இவ்வாறு கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்று லட்சத்து 60 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இருப்பிடங்களுக்குத் திரும்ப உதவி புரிந்துள்ள அரச, அரசசார்பற்ற மற்றும் ஐ.நா. அமைப்புக்களின் பணிகளை அவர் வரவேற்றுப் பாராட்டினார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தம் இடங்களுக்குத் திரும்பிச் செல்வதிலுள்ள இடர்பாடுகளைக் கவனத்தில் எடுக்கவேண்டும். வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகள், காணிகளையும் சொத்துக்களையும் சரியான உரிமையாளர்களைக் கண்டுபிடித்துக் கொடுத்தல், கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத குண்டுகளை அகற்றும்' பணிகளைத் தீவிரப்படுத்தல், உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளில் வீடுகளை உடையவர்களின் பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வுகளைக்கண்டு பிடித்தல் என்ற முறையில் இந்தப்பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும் என்றார் மக்னமாரா. மக்னமாராவும் அவரது குழுவினரும் புத்தளம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வுகள் நடத்தினர். (ப)

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தது

வளர்ப்பு நாய்களுக்கான "விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து நேற்று யாழ். வந்து சேர்ந்துள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுககான விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி முதல 2 கட்டமாக ஏற்றப்பட்டன. எனினும், 3ஆவது கட்டத் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை தாமதமானது. கொழும்பிலிருந்து மருந்து எடுத்து வருவது தாமதமடைந்தமையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. எனினும், நேற்றையதினம் மருந்து வந்து சேர்ந்துள்ளதால் தடுப்பூசி ஏற்றும் 3ஆம் கட்ட நடவடிக்கை அடுத்த வாரத்தில் ஆரம்பமாகும் என்று அவர் மேலும் தெரிவிததார். (ஒ-ரி)

## வெண்மை வாணிப சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ். மாவட்ட வெண்மை வாணிப சங்கங்களின் ஒன்றியத்தின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் யாழ். மாவட்ட ஒன்றியச் செயலகத்தில் தலைவர் கிபாலராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல பிரதேச செயற்குழு உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-ரி)


## தவறிவிட்டது

யாழ். மரியன்னை பேராலயத்தில் பற்றிக் அன்ரனி கஜிந்தினி என்பவருடைய வாகனசாரதி அனுமதிப்பத்திரம், கைத தொலைபேசி என்பன அடங்கிய வெள்ளை நிறப்பேர்ஸ் நேற்று (29.04.2004) வியாழக் கிழமை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல. 9, ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(31471) T.P.:077 60 64793


## பொருளியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.30

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் பொருளியல பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பொருளியல பாடம் சம்பந்தமாக ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரையாற்றுவார். (ஒ-ரி)

# சில சமுர்த்தி அலுவலர்களால் பொதுமக்களுக்கு நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ். மாவட்டத்தில் உள்ள சில சமுர்த்தி அலுவலர்கள் பொதுமக்களை நெருக்கடிகளுக்கு உள்ளாக்குகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்து வரும் மாதங்களில் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டு சமுர்த்தித்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சமுர்த்தி சிறுகுழுக்களில் இணைய மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்தநிலையில், கடந்த காலத்தில் கிராமிய சமுர்த்தி சிறு குழுக்களில் இணைந்து கொள்ளாதவர்களுக்கு எதிர்காலத்தில் சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது என்றும் -

சமுர்த்தி செயலணி சிறுகுழுக்களில் இணைந்துகொள்வதாக இருந்தால் சுமார் மூன்று வருடங்களுக்கான சமுர்த்தி சிறு குழுக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரைக்குமான - அங்கத்துவத் தொகையைச் செலுத்த வேண்டும் என்றும் - சில சமுர்த்தி அலுவலர்கள் நிபந்தனை விதிக்கிறார்கள் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். (ஒ-68)

# கட்சி யாப்பை மாற்றி அமைக்க ஜாதிக ஹெல உறுமய முடிவு

ஜாதிக ஹெல உறுமய கட்சி தனது கட்சியாப்பில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆராய்ந்துவருகின்றது.

தற்பொழுது பௌத்த பிக்குகளை மாத்திரம் உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இக்கட்சித் தலைவர் பதவியை மட்டும் பிக்குகள் வசம் வைத்துக் கொண்டு ஏனைய பதவிகளுக்கு பொதுமக்களை நியமிக்கக்கூடியதாக அமைப்புவாதிகளை மாற்றுவதற்கு ஆலோசித்து வருகின்றது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் பொதுமக்கள் மத்தியிலிருந்து மட்டுமே கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக நிறுத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. கட்சியின் தலைவர் வண. எல்லாவெல மெதானந்த தேரர் தொடர்ந்து அதே பதவியில் இருப்பார் என்றும் -

ஏனைய பதவிகளில் மட்டுமே மாற்றும் செய்யப்படும் என்றும் - கூறப்படுகின்றது.

இதேவேளை, நாடாளுமன்ற பிரதிச் சபாநாயகர் பதவிக்குப் போட்டியிடுவதில் தமது கட்சி அக்கறை கொள்ளவில்லையென்ற அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் வண. அதுரெலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளார். (ப)


## பிறந்தநாள் வாழ்த்து

30-04-2004



HAPPY BIRTHDAY

செல்வன்

### கனகேஸ்வரன் பிரதீப்

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த

கனகேஸ்வரன் - சரோஜா

தம்பதிகளின் தவப்புதல்வன்

செல்வன் பிரதீப்

தனது 8ஆவது பிறந்த தினத்தை இன்று வெள்ளிக்கிழமை அளவெட்டியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் புஸ்பவதி அக்கா, பிரான்ஸில் வசிக்கும் அண்ணன்மார் அத்தான் மற்றும் உற்றார், உறவினர்கள் அளவெட்டி காளி அம்பாள் அருளுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றார்கள்.

காட்டுப்புலம்,
அளவெட்டி.

- குடும்பத்தினர்

(31460)(14)



## விடுமுறைக் கால கணனி வகுப்புகள்

Dip. in MS Office
Internet and e.mail
Children Programming
Dip. in Desktop Publishing
Dip. in Hardware Technology

Start on 02/05/2004

மேலதிக தொடர்புகளுக்கு
STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிங்கைநகர் புலோலியைப் பிறப்பிடமாகவும், வல்லை வீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு.ஏ.வீ.கே.மாணிக்கம்

21.04.2004 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மேலதிக நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், பனை அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராகக் கடமையாற்றுவதோடு, திருமுருகண்டிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகவும், வெற்றிமனை மகளிர் உளவளத்துணை நிறுவனத்தின் செயலாளராகவும், கிராமியக் கல்வி, பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் (RE-EDO) தலைவராகவும், இன்னும் பல பொது அமைப்புக்களின் நிர்வாக உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். ஒரு சிறந்த சமூகசேவையாளரான இவரின் பணி புகழ்பூத்துக் குலுங்கவும், பல்நலமும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மைத்துனர்
**திரு.ஆ.சுப்பிரமணியம் குடும்பத்தினர்.**
*ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி.*

(31453)(42)

# வாழ்த்துகிறோம்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த

## திரு.தம்பையா கந்தசுவாமி

(உரிமையாளர் பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

அவர்கள் 21.04.2004 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு நாம் பெரிதும் உவகையடைகின்றோம்.

**இணுவில் கிழக்கு இளைஞர் கழகம், இணுவில்.**

(31465)(42-12-18-21)

# மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி

இடம்: ஆவரங்கால் மைதானம்
காலம்: 02.05.2004 ஞாயிற்றுக்கிழமை
பகல் 2.30 மணிக்கு

குறிப்பு:
போட்டிகள் A,B,C என மூன்று பிரிவாக நடத்தப்படும்.

– **ஆவரங்கால் இளைஞர்கள்.**

(31463)(34-21-12-18)


# VACANCY: Post of Interpreter

**The Applicant should have the following Qualifications:**

- An Excellent command in English and Tamil
- Healthy
- Age: 30 years or Younger
- Preferable lived abroad in the past

The selected person should be prepared to visit Mine fields, to carry on interpretation work on full time basis

Salary Negotiable

Please make an appointment (with contact Numbers) with in seven days.

The Operations Manager,
**The HALO Trust,**
655, Navalar Road, Nallur, Jaffna.

(31455)
(42-21-18-12)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# PRESENTATION SESSIONS - 2004

Two Postgraduate Research Students are presenting papers on their subject of research.
These presentation will be held in the Library Auditorium on the 30th April 2004 at 3.00 p.m. The presentations will be made in Tamil.

**The topics are as follows:**

1. "தமிழ் ஜப்பானியக் காதல் பாடல்களில் இயற்கை பற்றிய ஒப்பீட்டாய்வு"
   *(A Comparative study of the nature in the Tamil Japanese Love Poems.)*
   **Miss Selva Ambikai Nadarajah**
   (Research Student M.Phil.in.Tamil)
2. "பல்லவர் கால பக்திப் பாடல்களில் நாட்டார் வழக்காற்றியல் பண்புகள்"
   *(Aspects of the Folk Tradition in Bakti Poems of the Pallava Period.)*
   **Mr.S.Sivaniruttanantha**
   (Research Student : Ph.D.in.Tamil)

*You are cordially invited for this session.*

**Registrar.** (C/34812)(34-12-18-21)

## கணனிகள் அன்பளிப்பு

குருநகர்,ஏப்.30

உலக சுகாதார நிறுவனம் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு நான்கு கணனிகளை வழங்கவுள்ளது. இவை சுகாதார வைத்திய நிலையங்களுக்குப் பங்கிட்டு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-51)

## பெண்கள் தொடர்பான கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஆற்றல கலை சமூக செயன்முனைப்புக் குழுமம் பெண்கள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன.

கடந்த 20ஆம் திகதி தொடக்கம் இக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. (ஓ-12)

## ஈஸ்வரம்மா தினவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 4 ஆம் திகத் ஞாயிற்றுக்கிழமை ஈஸ்வரம்மா தினவிழாவும் வெசாக் போயாதின நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

காலை 5மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் மாலை 4.15மணி வரை இடம்பெறும்.

வடபிராந்திய ஆன்மீகக் கல்வி இணைப்பாளர் திருமதி ம.சரவணபவன சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். இது தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியாகிய செய்தியில் இந்த நிகழ்சசிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று தெரிவிக்கபட்டிருந்தது. அது தவறாகும்.(ஜ-10)

## புதிய கட்டடம் திறப்பு

சாவகச்சேரி,ஏப்.30

மட்டுவில் மத்தி வேவில் விநாயகர் சனசமூக நிலையப் புதிய கட்டடத திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலையத் தலைவர் மா.கண்ணகை பவான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனும், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுபபாளர் க.கலைவாணனும் கலந்துகொள்கின்றனர். (ஓ-31)

## நடமாடும் மருத்துவ சேவை

சாவகச்சேரி,ஏப்.30

யாழ்ப்பாணம் திருச்சிலுவைக் கன்னியர்மட மருத்துவ சேவைப் பிரிவினரின் மாதாந்த நடமாடும் மருததுவ சேவை கடந்த புதன்கிழமை மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா தேவாலயத்தில் நடத்தப்பட்டது. இந்த மருத்துவ சேவை திருக்குடும்ப மடச் சகோதரி எமறிற்றாவின் தலைமையில் நடைபெற்றது

இந்த மருத்துவ சேவையில் சுமார் 75இற்கும் மேற்பட்ட பொது மக்கள் மருத்துவ சேவையைப் பெற்றனர்.

நேற்று நடைபெற்ற மருத்துவ சேவையின்போது - மட்டுவில் சந்திரபுரம் சித்தியா மகளிர் சங்கத்தின் அனுசரணையுடன் மருத்துவக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் நோய்கள் பரவாது தடுப்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. இக்கருத்தரங்கினை சத்தியா மாதர் சங்கச் செயலாளர் திருமதி பிறேம ஜெகன் யோகராணியால் ஒழுங்கு செய்யப்பட்டது. (ஓ-31)

## போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர்

கொழும்பு,ஏப்.30

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சபைத் தலைவராக பேராசிரியா அமல் குமாரகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின சிவில் பொறியியல் பிரிவின் தலைவரான பேராசிரியர் குமாரகே, பஸ் கட்டணம் தொடர்பான தேசியக கொள்கைக் குழுவின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

கடந்த 27ஆம் திகதி இவர் தனது புதிய பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.


# விற்பனைக்கு

*இல. 56-XXXX தொடரிலக்க முடைய லைற் ஏசி வான் விற்பனைக்குண்டு.*

தொடர்புகளுக்கு:
**Dr.க.லோகநாதன்,**
தியாகராஜா கிளினிக்,
191, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(31458)


## சாவகச்சேரியில் மகளிர் விழா

தென்மராட்சி,ஏப்.30

வடபிராந்திய மகளிர் ஒன்றியத்தின் மகளிர் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு ஐக்கிய கொத்தணி அமைப்பைச் சேர்ந்த திருமதி பராசக்தி தி[illegible]வியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக செல்வி அனி குரியனும் சிறப்பு விருந்தினராக டாக்டர் திருமதி லியோன் புஸ்பராணியும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ-117)


# FASHION BEAUTY CORNER

**(Centre for Modern Women)**

முகஒப்பனை (Makeup), மணப்பெண் அலங்காரங்கள், கூந்தல் அலங்காரங்கள், சமையல், கேக்ஐசிங், திருமண வைபவ கேக்ஐசிங் & ஐசிங் மலர்கள் இவை அனைத்திற்குமான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது. பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். இதில் இணைந்து கொள்வதன் மூலம் பெண்கள் அனைவரும் (வயது எல்லை தேவையில்லை) தங்கள் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுக்கலாம்

பயிற்சி வகுப்புகள்:
மே முதலாம் திகதி (01-05-2004) 4.00p.m.
(தொடக்கம்) ஆரம்பமாகவுள்ளது.

▲ Working girls இற்கு நேரங்கள் ஒதுக்கி வகுப்புகள் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு:
**திருமதி ஜெயவாணி கஜேந்திரன்,**
இல.14, அம்மன் வீதி,
*(வீரமாகாளிஅம்மன் கோயில் முன்வீதி)*
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
021 222 6864 (invoice)

(சி-34814) (26-21-12-18)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கணித ஆசிரியர்
**திரு.முருகேசு சிவகுமாரன்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பரமேஸ்வரி முருகேசு

அவர்கள் 28.04.2004 அன்று கொழும்பில் காலமானார். அவரின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
**யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.**

(31468)
(24-12-18-21)

# ஓராண்டு நினைவலைகள்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 1928 – 05 – 08 |  | 2003 – 04 – 30 |

## திருமதி ஆசீர்வாதம் சிசிலியா பரிமளம்

(தனபாக்கியம்)

ஆண்டொன்று ஆகிடினும் ஆறவில்லை – எம்துயரம்
நீண்டதோர் சோகம் நிலைத்திடவே நீ வைத்தாய்
பூண்ட நல் அன்பால் புலம்புகின்றோம் எம் தாயே
மீண்டும் நீ எப்போ எம்மிடம் வருவாய்

நாளை (01.05.2004) சனிக்கிழமை அர்ச் லூர்து அன்னை ஆலயத்தில் காலை 7 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
**போயிட்டி.** (31461)(42-21-18-12) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி சண்முகலிங்கம்

(யாழ். அளவெட்டி வடக்கு அ.த.மி.க. ஓய்வுபெற்ற உப அதிபர்)

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி சண்முகலிங்கம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (29.04.2004) வியாழன் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சண்முகலிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்புமகளும் கந்தையா - தங்கம் அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, கனகசுந்தரம், வெண்டரசர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேந்திரலிங்கம், கணேசலிங்கம், முத்துக்குமாரலிங்கம், சுதிராகமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (30.04.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.சண்முகலிங்கம் (கணவர்).
*அளவெட்டி வடக்கு.*
(31454) (24-12-18-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# சரித்திரம் திரும்புகிறதா?

நான்கு வருடங்களில் மூன்று பொதுத் தேர்தல்களைச் சந்தித்திருக்கின்றது நாடு.

1994இல் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைந்ததால் 2000ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. ஆனால், அத்தேர்தலில் உறுதியான அரசு உருவாகாததால் 2001இல் மீண்டும் தேர்தலைச் சந்தித்தது நாடு.

2001இல் உறுதியான - அறுதிப்பெரும்பான்மை கொண்ட - ஸ்திரமான அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால், தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நான்கு ஆண்டுகள் முன்னதாகவே அந்த ஆட்சியைக் கலைத்து அடுத்த தேர்தலுக்கு வழி செய்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அதிகார ஆசையால் - அவாவினால் - அவர் மேற்கொண்ட இந்த நடவடிக்கை, அவர் எதிர்பார்த்த பலனை அவருக்குத் தரவில்லை.

உறுதியான - ஸ்திரமான - அரசை அமைத்திருந்த ஐக்கிய தேசிய முன்னணியை எதிர்க்கட்சி வரிசைக்கு அனுப்புவதற்கு அவரது அவசர நடவடிக்கை உதவியது என்பது உண்மைதான்.

ஆனால், நாட்டில் ஸ்திரமில்லாத ஓர் அரசை அந் நடவடிக்கை தோற்றுவித்துவிட்டது. அவரது அணியால் அரசுக் கட்டில் ஏறமுடிந்தாலும், அந்த அரசு 'நித்திய கண்டம்' என்ற நிலையில் அல்லாடும் நிலைமைக்குள்தான் சிக்கியிருக்கின்றது.

கொள்கைப் பற்றுறுதியிலும், சிந்தனைப் போக்கிலும், அணுகுமுறை வழிகளிலும் முரண்பட்ட - ஒன்றோடு ஒன்று வேறுபட்ட, எதிரும் புதிருமான நிலைப்பாடு கொண்ட - பல கட்சிகளின் சாம்பார் கூட்டு, ஆட்சி அமைத்திருக்கின்றது. அதுவும் அறுதிப் பெரும்பான்மை பெறாத சிறுபான்மை அரசு.

வெளியிலிருந்து - எதிர்க்கட்சிகளிடமிருந்து - உரிய ஆதரவைப் பெற்று, அறுதிப் பெரும்பான்மையை எட்டிவிடத் துடியாய்த் துடிக்கிறது அது. ஆனால், அதுவும் சரிப்பட்டு வருவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை. வெளியில் நிற்கும் ஓர் அணியை அரவணைத்தால் அதற்காக உள்ளே இருக்கும் மற்றோர் அணி பிய்த்துக்கொண்டு ஓடும் நிலைமை. அதனால் தடுமாறுகிறது அரசு.

நாடாளுமன்றத்தில் முக்கிய பதவி - அவைத் தலைவரான சபாநாயகர் பதவிதான். அதுவும் கூட எதிரணி வசம் போய்விட்டது.

இந்தநிலைமையில், இந்த அரசு எவ்வளவு காலத்துக்குத் தாக்குப்பிடிக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த அரசின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தமது நிறைவேற்று அதிகாரங்களை வைத்துக்கொண்டு, எவ்வளவு காலத்துக்கு இந்த அரசைக் கவிழவிடாமல் காப்பாற்றமுடியும் என்பது பெரிய கேள்விக்குறியே.

இந்தப் பின்னணியில்தான் தற்போதைய அரசியல் நிலைமையை ஆராய்ந்திருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

நேற்றுமுன்தினம் கூடிய அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு, இந்த அரசு நீண்டகாலம் நின்று பிடிக்காது; அடுத்த ஆறு மாதத்துக்குள் தேர்தல் நடப்பது உறுதி - என்று கருத்து வெளியிட்டிருக்கின்றது. அதற்கு முன்னர் கட்சியை மறுசீரமைத்துத் தேர்தலை எதிர்கொள்ளவும் தயாராவது என்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது அறுதிப்பெரும்பான்மையைப் பெறாத சிறுபான்மை அரசு ஆட்சிக்கு வந்தாலும் சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் இது முதல் தடவையல்ல. 1960இலும் பிரதமர் டட்லி சேனநாயக்கா இதே போன்ற சிறுபான்மை அரசு ஒன்றை அமைத்தார். அப்போதும்கூட இப்போது போன்றே சபாநாயகர் பதவி எதிர்க்கட்சியைச் சேர்ந்த ரீ.பி.சுபசிங்கவுக்குத்தான் கிட்டியது.

அந்த அரசு, முதல் நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்று 25 நாள்களுக்குள் கவிழ்ந்தது. அதனால் அடுத்தடுத்து நான்குமாதகால இடைவேளையில் இரண்டு பொதுத் தேர்தல்களை அப்போது நாட்டு மக்கள் சந்திக்கவேண்டியவர்களானார்கள்.

அதை ஒத்த நிகழ்வுகள் இப்போதும் இடம்பெறுவதால் சரித்திரம் திரும்புகிறது என ஐ.தே.கட்சி கருதுகின்றது.

1960 போல 2004 இலும் அடுத்தடுத்து இரண்டு பொதுத் தேர்தல்கள் வரலாம். அதற்கு வாய்ப்புகள் இல்லை என்று கூறமுடியாது.

பேரினவாதம் பேசியதன் மூலம் இந்தப் பொதுத் தேர்தலில் அதிக இலாபத்தை ஈட்டிக்கொண்ட பெரும்பான்மை இனக் கட்சிகள், மீண்டும் ஒரு தேர்தல் எந்நேரமும் நடக்கலாம் என்ற சூழ்நிலை நிலவுவதால் - அத்தகைய தேர்தலை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு - மேலும், மேலும் பேரினவாதப் போக்கில் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

- இதுதான் இன்று நாட்டைப் பீடித்திருக்கும் துரதிர்ஷ்டவசமான அரசியல் நிலைமை.

# சமாதானச் சூழலை நிரந்தரமாக்குவதே சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வழி!

## சிவனேசன் எம்.பி. உதயனிடம் கருத்து



யாழ்ப்பாணம்,ஏப்.30

இன்று நிலவும் தற்காலிக சமாதானச் சூழலை நிரந்தரமாக மாற்றி அமைப்பதன் மூலமே தமிழர் இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன்.

சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாக உதயன் செய்தியாளரிடம் கருத்துக் கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது பொறுப்பேற்றிருக்கின்ற அரசினுடைய அண்மைக் கால நடவடிக்கைகளை அவதானிக்கின்றபோது தமிழ் இனத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை காட்டப்படாத நிலையே தென்படுகிறது.

நாடாளுமன்றச் செயற்பாடுகள் ஆரம்பித்ததன் பின்னர் நோர்வேத் தரப்புடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அரசு, கடந்த காலங்களில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்காதது சரித்திரமாகிவிட்டது. அத்துடன், நாடாளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் நடவடிக்கைகளைக் குழப்பும் வகையில் அது செயற்படத் தொடங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்களுடைய அபிவிருத்தி தொடர்பான அமைச்சுக்களின் கூடுதலான பகுதிகளை டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கியிருப்பது தமிழ்மக்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கின்ற ஆணைக்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ள ஒரு செயலாகும். சபாநாயகர் தெரிவின்போது கூடப் புதிய அரசு தொங்குநிலையில் இருப்பதைச் சுட்டி நிற்கிறது.

இந்தநிலை தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இந்த அரசுடன் பேசவேண்டும் என்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தவில்லை.

தமிழ்த்தேசியம், எங்களது சுதந்திரம், தன்னாட்சி உரிமை என்பவற்றைத் தமிழினமே நிலைநாட்ட உணர்வோடு எழுந்து சர்வதேச சமூகத்திற்கு அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும். அதன் ஊடாக நாம் எமது சுயாட்சியைப் பெற்றுக்கொள்வதற்கான நேரடி முயற்சியில் இறங்கவேண்டும்.

புதிய அரசை எதிர்பார்த்து அவர்களுடன் பேச்சு நடத்துவதன் மூலம் நாங்கள் உரிமைகளைப் பெறுவோம் என்பது சந்தேகத்திற்கு உரிய விடயமாகும். புதிய அரசின் செயற்பாடுகள் இந்தச் சந்தேகத்தை எமது மனங்களில் தோற்றுவித்துள்ளன.

சர்வதேச மத்தியஸ்தம் ஒன்றின் மூலமாகத் தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படவேண்டும். இன்று நிலவும் சமாதானச் சூழலை நிரந்தரமாக மாற்றி அமைப்பதன் மூலமே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு எப்படி இருக்கப் போகிறது என்பதை நாங்கள் அறியமுடியும்.

புதிய அரசு பொறுப்பேற்றுள்ள சூழலில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அதன் பின்னணியில் சிங்களப் பேரினவாதம் செயற்படுகிறது என்பது தெளிவான ஒன்று. இத்தகைய புறநிலை தோன்றுவது தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நல்லதல்ல - என்றார் அவர்.

(ஒ-12)

# விசர்நாய்க் கடிக்கு உள்ளாவோர் தடுப்பூசியேற்றுவதில் அக்கறை தேவை

## அதனால் மரணத்தைத் தடுக்கலாம் என்கிறார் வைத்திய அதிகாரி

அச்சுவேலி,ஏப்.30

விசர்நாய்க்கடிக்கு உள்ளாவோர் நோய்த் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில் கவனம் செலுத்தவேண்டும். இல்லாவிட்டால் உயிரிழப்பை எதிர்கொள்ள நேரிடும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ். போதனா வைத்தியசாலை சிரேஷ்டவைத்திய அதிகாரி டாக்டர் கே.இரத்தினசிங்கம்.

வெப்பநிலை அதிகரித்துவரும் இந்தக்காலப் பகுதியில் விலங்குகள் விசர் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகக்கூடிய நிலை காணப்படுவதால் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

சிரேஷ்ட வைத்திய அதிகாரி இது பற்றி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

விசர் நோய்த் தாக்கத்திற்குள்ளான விலங்குகள் மனிதர்களையும் ஏனைய விலங்குகளையும் கடிக்கின்றன. இதன் மூலம் விலங்கு விசர்நோய் தீவிரமாகப் பரவுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் தினசரி 10 பேருக்கும் குறையாத எண்ணிக்கையினர் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) ஏற்றிக்கொள்கின்றனர். கடந்த வருடத்தில் 5ஆயிரம் பேர் விலங்கு விசர்நோய்த் தடைமருந்து ஏற்றிக்கொண்டுள்ளனர்.

விலங்கு விசர்நோய் தடைமருந்தினை உரிய காலப் பகுதியில் ஏற்றிக்கொள்வதன் மூலம் விலங்கு விசர்நோய்த் தாக்கத்தில் இருந்து தப்பிக்கொள்ளலாம்.

விசர் நாய்க்கடிக்கு உள்ளாகிய சிலர் ஏற்புநோய்த் தடை ஊசியை ஏற்றிக்கொண்டு 'ஏ.ஆர்.வி.' ஊசி மருந்தை ஏற்றிக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். இதனால், அவர்கள் மரணமடையவும் நேரிடுகிறது.

விசர் நாய்க்கடிக்கு உள்ளாவோர் விலங்குவிசர் நோய்த் தாக்கம் உடலில் தெரிவதற்கு முன்னர் தடைமருந்தை ஏற்றிக்கொள்ளவேண்டும். சிலர் நோய்த்தாக்கம் தெரிகின்ற நிலையில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருகின்றனர். அவர்களைக் காப்பாற்றுவது மிகமிகக் கடினமாகும். அவர்கள் மரணிக்க வேண்டியநிலை ஏற்படுகின்றது - என்றார் அவர் (ஒ-11)

# மருத்துவப் பட்டப்பின் படிப்புக்கு சேரும் வயதில் மாற்றமில்லை

கொழும்பு,ஏப்.30

மருத்துவத்துறைப் பட்டப்பின்படிப்புக் கல்லூரியில் சேர விரும்பும் மருத்துவர்களின் வயதெல்லை 35 வயதாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததை உடனடியாகக் கைவிட அக்கல்லூரி ஒப்புக்கொண்டிருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி கல்லூரியின் பணிப்பாளர் பேராசிரியர் லலிதா மெண்டிஸுடன் நடத்தப்பட்ட பேச்சின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மருத்துவர் சங்க ஊடக அதிகாரி டாக்டர் சென்னா பெரேரா தெரிவித்தார். மருத்துவக்கல்லூரியில் சேரவிரும்பும் மருத்துவர்களின் வயதெல்லை 35ஆக இருக்கவேண்டும் என அக்கல்லூரி அண்மையில் சுற்று நிருபம் ஒன்றை விடுத்திருந்தது. இதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. இதனையடுத்தே முன்னர் இருந்த 51வயதெல்லையே மீண்டும் நிர்ணயிக்கப்பட்டுப் புதிய அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. (ப)

### அரச ஊழியர் சம்பள உயர்வு:

# திஸ்ஸதேவேந்திரா சிபார்சுகளை மீளாய்வு செய்யக் குழு நியமனம்

கொழும்பு,ஏப்.30

அரச ஊழியர்களின் சம்பளங்கள் தொடர்பாகத் திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழு முன்னர் தெரிவித்திருந்த சிபார்சுகளில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசித்து முடிவெடுப்பதற்கென பத்து பேர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் நியமித்தார்.

இந்தக் குழுவின் தலைவராகத் திஸ்ஸதேவேந்திராவே நியமிக்கப்பட்டுள்ளார். முன்னைய சிபார்சுகளை மீளாய்வு செய்யும்படியும் -

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கக்கூடியதாக சிபாரிசுகளை வழங்கும்படியும் - இக்குழுவை ஜனாதிபதி கேட்டுள்ளார் என்று பொதுச்சேவைகள் நிர்வாகம் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் அமரசிறி தொடங்கம தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்தார் என்று கூறிய அமைச்சர், முன்னைய ஐ.தே.மு. அரசு தேவேந்திரா ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல் நடத்தவில்லையென்றும் -

இதன்மூலம் பொதுச்சேவையாளர் சம்பளங்களில் முரண்பாடுகளை ஏற்படுத்திவிட்டது என்றும் - ஜனாதிபதி தெரிவித்தார் என்றும் கூறினார். (ப)

## நாளை

சித்திரை 19
சனிக்கிழமை
(01.05.2004)
திதி : ஏகாதசி
பகல் 8.30 வரை
ஏகாதசி விரதம்
நட்சத்திரம்: உத்தரம்
பின்னிரவு 3.51 வரை
[illegible]: 3.57 - 4.27
ராகுகாலம்: 8.57 - 10.27
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தன்னம்பிக்கையுள்ள மனி[illegible] ரோஜாக்கள் தான் கண்ணில் படும். முட்கள் கண்ணில் படாது.

# பாடசாலை செல்லாத சிறுவர்களின் விவரங்களைத் திரட்டுகிறது 'யுனிசெவ்'

யாழ்ப்பாணம்,ஏப்.30

குடாநாட்டில் யுத்தம், குடும்பநிலை போன்றவை காரணமாகப் பாடசாலை செல்லாத சிறுவர்களின் விவரங்களை ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் சேகரித்துத் தருமாறு 'யுனிசெவ்' நிறுவனம் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான எதிர்கால நடவடிக்கை தொடர்பாக நேற்று யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட 'யுனிசெவ்' நிறுவனத்தின் பிரதிநிதிகளான செல்வி றொசானா, செல்வி பறுனோ ஆகியோர் இந்தக் கோரிக்கையினைக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களிடம் விடுத்தார்கள்.

நேற்றுக் காலை 10 மணிக்கு 'சிறுவர் உரிமைகள்' தொடர்பான யாழ். திட்ட இணைப்பாளர் த.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலிருந்தும் தலா 40 ஆசிரியர்கள் சிறுவர்கள் தொடர்பான விவரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்படலாம் என்று கூறப்பட்டது.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடசாலையூடாகவும் விவரங்களைத் திரட்டுவதன் மூலமே குடாநாட்டில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் - இவர்கள் எந்தவகையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரங்கள் தெரியவரும் என அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர்நலன் தொடர்பான செயற்றிட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் அடுத்த ஒரு நாள் கூட்டம் அடுத்த மாதம் 9ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று 30.04.2004 மாலை விநியோகிக்கப் படும். பதிவுசெய்தோரும், தேவைப் படுவோரும் தொடர்புகொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P 3529,2867. P.ரவி, துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31421)

### வாடகைக்கு

பிரத்தியேக வழி உள்ள மேல் மாடி வாடகைக்கு உண்டு (கந்தோர் பாவனைக்கு மட்டும்). தொடர்பு: இராசா வாமதேவன் T.P.:2223239. (31424)

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக் குள் பொறியியலாளர் குடும்பம் ஒன் றிற்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசிஎண்: 0777 222274. (31450)

### விற்பனைக்கு

தலை...ன், மீன்தொட்டிகள், குருவி கள், ச...டுகள், பூங்கன்றுகள், சாடிகள், அல்...சேஷன் நாய்க்குட்டிகள் விற்ப னைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனி ...ர் லேன், யாழ்ப்பாணம். (31456)

### பொதுக்கூட்டம்

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்ட மும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கோட்டை முனியப்பர் ஆலய முன்றில் இடம்பெற வுள்ளன. (10)

# பிறந்தநாள் வாழ்த்து




60ஆவது அகவையில்
அளப்பெருஞ்சேவையை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

## உயர்திரு. சு.மணிவாசகன்

அவர்கள்

அகவை யறுபதில் பணிநிறைத்து மிளிரும்
மணிவாசகப் பெருந்தகையே; எம் பெருமை நிறை
பொதுமுகாமையாளரே; ஆளுமை நிறைபெருந்
தலைவரே; அன்பொடு நெகிழ்வுஞ் சேர நட்புடனென்றும்
அக மகிழ்வுடனே பழகுமன்பரே; கடமை
கண்ணியம் கட்டுப்பாடென்றே கடுமையா யுழைத்தீர்;
இகமதில் கடமைவீரராய் நிறைந்தீர்;
ஆளுமை நிறை ஊழலிலா வுண்மை யுழைப்பாலுயர்ந்தீர்;
முகமலர்ந் தன்புடனே பாசமாயனைவரொடும்
பழகிடினும் கடமையில் கண்டிப்பைக் கடைப்பிடித்தீர்;
ஜெகமதில் "நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழக"
மென்றே இலக்கணமாய் வாழ்ந்தீர்; வாழ்க பல்லாண்டு!

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் 39வருடங்கள் சேவையாற்றி இன்று இளைப்பாறும் **திரு.சு.மணிவாசகன்** (பொது முகாமையாளர்) அவர்கள் 60ஆவது அகவையில் சீரும், சிறப்பும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகிறோம்.

**அன்பு நெஞ்சங்கள்**
**வ.பி.போ.சபை, கோண்டாவில்.** (31434)(34-42-14)

## அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. 7187
நம்பிக்கைச் சொத்து

பொன்னம்பலம்பிள்ளை சிற்றம்பலம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
மனுதார்

மேலே பெயர் குறித்த மனுதாரர் மீசாலை வடக்கு வெட்டுக்குளம் வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கு தர்மகர்த்தா என்ற கோதாவில் குறித்த கோவிலுக்குச் சொந்தமானதும் இதன் பின் ஆதன இடாப்பில் நன்கு விவரிக்கப்படுவதுமான ஆதனத்தை ரூபா 1,03438.99 சதத்துக்கு மீசாலை வடக்கைச் சேர்ந்த சின்னவன் இராசரத்தினத்துக்கு விற்று அப்பணத்தைக் கோயிலைப் புனரமைத் துத் திருப்பணி வேலைகளைச்செய்து கும்பாபிஷேகம் செய்யவென அதற்கான அனுமதிகோரி இம்மன்றில் இவ்வழக்கைத் தாக்கல் செய் துள்ளார். குறித்த விண்ணப்பத்துக்கு ஆட்சேபனை உடைய ஆள் எவரும் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அல்லது அதறகு முன்பதாகத் தாம் நேர்முகமாகவோ அல்லது சட்டத்தரணி மூலமா கவோ தோற்றித் தமது ஆட்சேபனையைக் கோப்பிடுமாறும் தவறின் மனுதாரரின் விண்ணப்பம் இம்மன்றினால் பரிசீலனை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுமெனவும் இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்,
சாவகச்சேரி மாவட்ட
நீதிமன்றம்.


ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி மீசாலை வடக்கு இறை "கட்டைப் பறித்தான்" நில.பர 6,5/8 உத்தரவுபெற்ற நில அளவையாளர் வ.சிவராசா அவர்களால் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி சித்திரிக்கப்பட்ட 2123 ஆம நில அளவைப் படத்தில் 1 ஆம் துண்டாகக் காட்டியுள்ளது. இதன விசாலம் நில.பர. 7 குழி 11.41 (ஏழு குழி பதினொன்று தசம் நாலு ஒன்று) இதற்கெல்லை கிழக்கு கனகு தங்கவேலுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு கந்தன் கணபதிக்குரிய ஆதனம் இதடங்கலும். 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி.

வரைபு
செ.பாலகிருஷ்ணன்
மனுதாரரின் சட்டத்தரணி.

பதிவாளர்,
சாவகச்சேரி மாவட்ட
நீதிமன்றம்.
(31451)(34-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.கிருஷ்ணர் குணரத்தினம் J.P.

பண்டத்தரிப்பு பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் அவர்கள்,

கடந்த 23.04.2004 ஆம் திகதி அன்று யாழ். மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங் கைச் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டதையிட்டு நாம் பெருமகிழ்வடைகிறோம்.

இவரது பணி மேன்மேலும் சிறப்படைய மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
**பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**பண்டத்தரிப்பு.**
(31448)(42-34-14)

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம்

### (கார்ப்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### கடன் இலக்கம் - 2043 - ஸ்ரீ (எஸ்.எவ்)

**யாழ். மாவட்டத்தில் சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜீ.ஓ.) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு**

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. வடக்கு - கிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைப்பதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கு உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரச திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்டவெளிக்கள உத்தியோ கத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்தச் சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தைத் திட்ட மிடுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல்நடத்துவதற்காகச் சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக் கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் சில கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்று படுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங் களை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப் படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | ஊர்காவற்றுறை | எழுவைதீவு J/39 |
| | தென்மராட்சி | கோயிலாக்கண்டி J/296 |
| | தெல்லிப்பழை | குட்டியப்புலம் & வசந்தபுரம் J/244 |
| | சங்கானை | துணைவி J/159 |
| | கோப்பாய் | வசந்தபுரம் J/258 |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இதுபற்றிய மேலதிக விவரங்களை வேலைநாள்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 வரை என்னிடமிருந்து (தொலைபேசி 222 3625, தொலைநகரி 222 5163, மின் னஞ்சல் necordjf@sltnet.lk) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல்நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை எனக்கு 21.05.2004 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்கவேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும்பொழுது பின்வரும் விவரங்களை அது உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விவரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விவரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரி யாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.
03. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூகமீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடக்கு - கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவ டிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்குதல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்கல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடக்கு - கிழக்கில் தற்போது தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் தொகையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் விவரங்களும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்புத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதையும் அவை திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு.செ.பத்மநாதன்
மாவட்ட செயலாளர்/அரச அதிபர்,
யாழ். மாவட்டம்.

(C/34809)(34-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டால் சோர்ந்துவிடாமல் நிற்கவேண்டும்!

## 'கலர் ஸோன்' பிரைவேட் நிறுவன அதிபர் பைரூஸ் காசிம் வலியுறுத்திக் கூறுகிறார்

*கேள்வி:* உங்களைப்பற்றி எங்களுக்கு விளக்கமாகக் கூறமுடியுமா?

*பதில்:* நான் ஆரம்பத்தில் இருந்து சிறு சிறு வியாபாரங்களைச் செய்து கொண்டிருந்தேன். குறிப்பாக 'ஸ்கிரீன் பிரிண்டர்' தொடர்பாக எனக்குப் பெரும் நாட்டம் இருந்தது.

ரீசேர்ட்டுக்குரிய சின்னங்கள், படங்கள் என பிரபலமடைந்த பெரிய நிறுவனங்களின் சின்னங்களை வடிவமைத்து, அவற்றை ரீசேட், தொப்பி போன்றவைகளில் பதிப்பது. இதுவே எனது பிரதான வியாபாரமாகும். ஆரம்பகாலத்தில் நான் கொட்டாவ பகுதியல் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு வாங்கி அதில் நான் தனியாகத் தொழிலை ஆரம்பித்தேன். பின்னர் எனது தயாரிப்புக்கு நிறைய விற்பனை கிடைத்தது.

அதன் பின்னர் நான் அந்தச் சிறிய இடத்தை விட்டு வேறோர் இடத்திற்குச் சென்றேன். அச்சமயத்தில் என்னிடம் 25 பேர் தொழில்புரிந்தனர். இன்று எனது நிறுவனத்தில் 220பேர் தொழில் புரிகின்றனர். உலகம் முழுவதிலும் இருந்து எனக்கு உத்தரவுகள் கிடைக்கின்றன.

நல்ல தொழில்நுட்பம் தெரிந்த ஊழியர்கள் என்னிடம் இருக்கிறார்கள். நாம் வடிவமைக்கும் சின்னங்கள், இலச்சினைகள் போன்றவற்றிற்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

*கேள்வி:* தற்போது உங்களது நிறுவனம் இயங்கும் கட்டடம் சொந்தமானதா? அல்லது வாடகைக்குப் பெற்றதா?

*பதில்:* எனது நிறுவனம் நான்கு மாடிகளைக் கொண்ட பெரிய கட்டடமாகும். அதைக் கட்டிமுடித்து தொழிலை ஆரம்பிக்க 600 லட்சம் ரூபா செலவழித்தேன். இப்படி பெருந்தொகைப்பணத்தை இதற்கு முதலீடு செய்வதற்கு செலான் வங்கி எனக்குத் தோளோடு தோள் நின்று உதவி புரிந்துள்ளது. தொடர்ந்தும் அந்த வங்கி எனது நிறுவனத்திற்கு உறுதுணையாக இருந்து வருகிறது. கடந்த எட்டு வருடங்களாக செலான் வங்கியில் வாடிக்கையாளராக இருந்து வருகிறேன். இத்துறையில் நீண்ட அனுபவத்தைப் பெற்றுள்ளேன்.



ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதித்த சமரவிக்கிரமவும் 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறுப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் தொழிலதிபர் பைரூஸ் காசிமை செவ்விகாண்கிறார்கள். வங்கி அதிகாரி, மொழிபெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தொழிலதிபர் முஹம்மது பைரூஸ் காசிம் கடந்த 27ஆம் திகதி தோன்றி தனது தொழில் முன்னேற்றம் குறித்து விவரித்தார்.

**வர்த்தக ஸ்பெஷல்**

"கலர் ஸோன்" பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அதிபரான பைரூஸ் காசிம் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டால் சோர்ந்து போய்விடாமல் எதிர்த்து நிற்க வேண்டும்" என்று கூறினார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் அறிவிப்பாளர் சமுதித்த சமரவிக்கிரமவும் 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குழுப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் பைரூஸ் காசிமை செவ்வி கண்டனர்.

*கேள்வி:* இந்தத் தொழில் துறையில் சறுக்கல் ஏற்படவில்லையா?

*பதில்:* வியாபாரத்தில் மேடு பள்ளம் ஏற்படுவது சர்வ சாதாரண விடயமாகும். 1998ஆம் ஆண்டு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. இருந்தபோதிலும் எனது முயற்சியை நான் கைவிடவில்லை. ஒருசமயத்தில் பல லட்சம் ரூபாக்களை இழக்க வேண்டியேற்பட்டது. இருந்தும் நான் சோர்ந்துவிடவில்லை. வியாபாரத்தில் சோர்வு ஏற்பட்டால் ஒருபோதும் முன்னேற முடியாது.

எனக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்ட போது செலான் வங்கி என்னை அரவணைத்தது. 2000ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த 'லான்ட்மார்க்' கண்காட்சியில் எனது தயாரிப்புக்களும் வைக்கப்பட்டன. அதன் பிறகு நிறைய உத்தரவுகள் கிடைத்தன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளும் அதிகரித்தன. இன்று இலங்கையில் எனது நிறுவனம் முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறது.

உலகின் பெரிய நிறுவனமான 'மார்க்ஸ் ஸ்பென்சர்' நிறுவனத்தினர் தமது தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதன் மூலமே பெரும் இலாபத்தை அடைகின்றனர். அதுபோல் எமது தயாரிப்புக்களில் பெரும்பாலானவற்றை ஏற்றுமதி செய்வதையே விரும்புகின்றேன். அதன் மூலமே சிறந்த வருவாயைப் பெறமுடியும்.

*கேள்வி:* இலங்கையில் உங்களுக்குப் போட்டி நிறுவனங்கள் உள்ளனவா?

*பதில்:* வியாபாரத்துறையில் போட்டியல்லாமல் முன்னேறமுடியாது. என்னை விட இன்னொருவர் முன்னேற முயற்சித்தால் அவரை நான் முந்திச்செல்ல வேணடும் என்று திடசங்கற்பத்துடன் செயற்படுவேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் என்னை யாரும் முந்திவிடக்கூடாது என்பதில் நான் மிகவும் விழிப்புடனேயே இருக்கிறேன். இத்துறையில் பல இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கின்றேன்.

எனது நிறுவனத்துடன் போட்டி போடும் அளவுக்கு வங்காளதேசம், இந்தியா போன்ற நாடுகளில் உள்ள கமபனிகள் உருவாகியுள்ளன. எனது நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு அதிககிராக்கி ஏற்பட்டுள்ளதற்கு மூலகாரணமே தொழில்நுட்பத்தில் சிறந்த ஊழியர்கள் என்னிடம் இருப்பதுதான். அதேபோன்று அத்தொழில்நுட்பம் வாய்ந்த இயந்திரங்களும் என்னிடம் இருப்பதன் காரணமாக எனது தயாரிப்புக்கள் தரமானவையாக உள்ளன.

*கேள்வி:* வியாபாரத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?

*பதில்:* முன்னேற வேண்டுமெனறு நினைத்தால் முழு அர்ப்பணிப்புடனும் செயற்பட முன்வர வேண்டும். சளைக்காத உழைப்பே ஒருவனை உயர்ந்த ஸ்தானத்திற்குக் கொண்டு வரும். நான் வியாபாரத்துறைக்கு வருவதற்கு முன் விமானப் பணியாளராகத் தொழில் புரிந்தேன். எனது கடமையின் போது மதுபானம் அருந்திய ஒரே காரணத்துக்காக என்னை அத்தொழிலில் இருந்து நீக்கினார்கள். அன்று முதல் இன்றுவரை நான் மதுபானம் அருந்துவதில்லை. அந்தச் சம்பவம் என்னை இந்தளவுக்கு உயர்த்துவதற்கு ஒரு காரணமானது என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். போதைத் தடுப்பு இயக்கத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றேன்.

- இவ்வாறு கூறினார் பைரூஸ் காசிம்.

# விட்டுக்கொடுப்புடனும் நற்பண்புகளுடனும் அரும்பணியாற்றியவர் அமரர் சீ.கே.கந்தசாமி!

## நினைவஞ்சலி நிகழ்வில் கல்லூரி அதிபர் புகழுரை

விட்டுக்கொடுப்புகளையும் நற்பண்புகளையும் தன்னகத்தே கொணடு கல்விச் சமூகத்துக்கும் சமுதாயத்துக்கும் அரும்பணியாற்றியவர் அமரர் சீ.கே.கந்தசாமி.

- இவ்வாறு புகழாரம் சூட்டினார் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சீ.கே.கந்தசாமி ஆஸ்திரேலியாவில் அண்மையில் காலமானதையிட்டு கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் இ.நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த இரங்கல் கூட்டத்தில் கலந்துகொண்டு அஞ்சலி உரைநிகழ்த்துகையிலேயே அதிபர் பொ.கமலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமரர் சீ.கே.கந்தசாமியைப் பொறுத்தவரையில் ஓர் அதிபராக மட்டுமன்றி சமூகத்தின் சேவகனாகவும் மனிதநேயத்தை மதிப்பவராகவும் விளங்கினார். ஆங்கிலமொழி மூலம் கல்விகற்ற ஒரு பட்டதாரியாக இருந்தபோதிலும் தமிழர்களுடைய மரபு ரீதியான பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே உள்வாங்கி அதன்படி வாழ்ந்த பெருந்தகை அவர்.

இவற்றுக்கு மேலாக அவரிடம் நல்லதொரு விசேட பண்பு இருந்தது. விட்டுக்கொடுத்து மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கி அவர்களுக்கு ஒத்தாசை புரிகின்றதுதான் அந்தப் பண்பு. இதற்கு உதாரணமாக ஒன்றைக் கூறலாம். அமரர் சீ.கே.கந்தசாமி தனக்கு இளவயதிலே கிடைக்கவிருந்த கல்லூரி அதிபர் பதவியினை கல்லூரியின் வளர்ச்சி கருதி பெரியார் ஹண்டி பேரின்பநாயகத்திற்குக் கிடைக்கச் செய்து, தான் உபஅதிபராக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவருடைய இழப்பு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மட்டுமல்ல கல்விச் சமூகத்திற்கும் பேரிழப்பாகும் - என்றார்.

**சுடர் மகேந்திரன்**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சுடர் இ.மகேந்திரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

அமரர் சீ.கே.கந்தசாமி கல்வித்துறைக்கு மட்டுமன்றி விளையாட்டுத் துறைக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரியை உதைபந்தாட்டத்தில் சிறப்புறச் செய்தது மட்டுமன்றி சாரணர், கடேற் பிரிவு போன்றனவும் இவரால் வளர்க்கப்பட்டன - என்றார்.

**குணபாலசிங்கம்**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் சி.குணபாலசிங்கம் உரைநிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:-

என்னைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக அழைத்து, எனது கற்பித்தலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து தனது வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர் அமரர் சீ.கே. கந்தசாமி - என்றார்.

**பஞ்சலிங்கம்**

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

அமரர் கந்தசாமி [illegible] ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராகக் கடமையேற்றார். 1942ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவனாக நான் சேர்ந்தேன். அத்துடன் 1958ஆம் ஆண்டு இக்கல்லூரியல் ஆசிரியராக நியமனம்பெற்று அவர் இளைப்பாறும் வரை இப்பதவியல் தொடர்ச்சியாக இருந்தமையினால் அமரரை நான் நன்கு அறிவேன்.

அவரின் கற்பித்தல் முறை எனக்கு மிகவும் பிடித்ததொன்றாகையால் பிற்காலத்தில் நான் ஆசிரியராக வந்த போது அவர் எமக்குக் கற்பித்த முறைகளையே பின்பற்றினேன். அவர் ஒரு சிறந்த கல்விமான் மட்டுமல்ல ஒரு சிறந்த ரென்னிஸ் (Tennis) ஆட்டவீரரும் கூட. எமது மைதானத்தின் வடக்குப் புறத்திலே ரென்னிஸ் ஆடுகளம் ஒன்றை அமைத்து அவரும் வேறு ஆசிரியர்களும் விளையாடுவதை நான் பார்த்திருக்கின்றேன்.

கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை என்னும் பெயருடன் விளங்கிய இப்பாடசாலை பின்னர் ஒரு சில வருடங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியாகத் தரம் உயர்ந்தது. அவர் ஆசிரியராகப் பதவியேற்றபோது சுமார் 300 மாணவர்களுடன் இயங்கிய இப் பாடசாலை அமரர் ஓய்வுபெற்றபோது 1800 மாணவர்களைக் கொண்ட ஒரு முதல் தரப் பாடசாலையாக மாறியது - என்றார்.

முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், (கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) அதிபர் ஏ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கொக்குவில் இந்துக் [illegible] இரங்கல் உரை நிகழ்த்தினார்கள்.(ஒ-ரி-8-69-ரி)

திருகோணமலை மாவட்ட

# தேர்தல் முடிவை ரத்துச் செய்யக்கோரி நீதிமன்றில் ஈ.பி.டி.பி. மனுத்தாக்கல்

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் திருகோணமலை மாவட்ட முடிவுகளை ரத்துச் செய்யக்கோரி ஈ.பி.டி.பி. மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மனு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளது.

ஈ.பி.டி.பியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் கே.விக்னேஸ்வரன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலையில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இரா.சம்பந்தன், கே.துரைரட்ணசிங்கம் உட்பட 14 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (8)

# மல்லாகம் வீதியைப் புனரமைக்கும்படி 300 கையெழுத்துக்களுடன் கடிதம்

## அரச அதிபருக்கு அனுப்பிவைப்பு

மிக நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்து வரும் மல்லாகம் ஏழாம் கட்டை, தேவாலய வீதியைப் புனரமைக்கக் கோரி அப்பிரதேச மக்கள் சார்பாக மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் நிர்வாகம் யாழ். அரச அதிபருக்கு முந்நூற்று ஐம்பது பொதுமக்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கும் மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாதிருந்துவரும் மல்லாகம் தேவாலய வீதி இன்று மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இவ்வதியை மையமாகக் கொண்டு சுமார் 500 குடும்பங்கள் போக்குவரத்துச் செய்துவருகின்றன. குண்டுங் குழியுமாக மாறிவிட்ட இவ்வீதியில் போக்குவரத்துச் செய்யும் மக்களும் வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

'இதுவரை இவ்வீதியைப் புனரமைக்க எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயுள்ளன. எனவே, இப்பிரச்சினையைத் தங்கள் முன் வைக்கின்றோம். தங்களின் மேலான நடவடிக்கைக்காகக் காத்திருக்கின்றோம்' என்று மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-150)

## கௌரவிப்பு விழா

தற்காப்புக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்ட பிரம்மஸ்ரீ சோ.சுப்பிரமணியக் குருக்கள், பிரம்மஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள் ஆகியோரைக் கோப்பாய் ஞானபண்டித சைவவிருத்திச்சங்கம் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 6மணிக்கு சங்க மண்டபத்தில் அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை மாவை ஆதீனகர்த்தா து.சண்முகநாதக் குருக்கள், பிரம்மஸ்ரீ க.நகுலேஸ்வரக் குருக்கள, சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐ.மகேஷ்வரக்குருக்கள் உட்பட பலர் நிகழ்த்தவுள்ளனர்.(10-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டம் (CAARP)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## கடன் இலக்கம் - 2043 SRI (SF)

### முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜீ.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வட கிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை மீளமைப்பதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கு உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதானநோக்கமாகும். இத்திட்டம் வட கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத் திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், தட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்தச் சமூக அபிவிருத்தி உப திட்டங்கள், சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரணபங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தைத் திட்டமிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச்செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங்களைச் செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| இல. | மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு | கரைதுறைப்பற்று | கேப்பாபிலவு |
| 02. | முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | பாண்டியன்குளம் |
| 03. | முல்லைத்தீவு | துணுக்காய் | திருநகர் |
| 04. | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | நெத்தலியாறு |
| 05. | முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | பனிக்கன்குளம் |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனங்கள் இதுபற்றி மேலதிக விவரங்களை வேலை நாள்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (தொலைபேசி: 024 2222402 தொலைநகல்: 024 2220592) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்தவிரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களுடைய விருப்பத்தெரிவை முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு /அரச அதிபருக்கு 25-05-2004 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத்தெரிவு வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விருப்பத்தெரிவை அறிவிக்கும்பொழுது பின்வரும் விவரங்களை அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.


1. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விவரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியாகப் பதிவுசெய்த விவரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக்காரியாலயம் முதலியன.
2. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம்பெற்ற துறையும்.
3. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூகமீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
4. விஷேடமாக வடக்கு - கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறுகுழுக்களை உருவாக்கல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
5. வடக்கு - கிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தும் வேலைத்தொகையும், கடந்த் 5 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விவரங்களையும்.
6. இக்குறிப்பிட்டதுறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
7. அத்திட்டத்திற்கான அரசசார்பற்ற நிறுவனத்தின் பங்களிப்பு.
8. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும், விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதனையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திருமதி இமெல்டா சுகுமார்**
**மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**
(C/31875)(14-19-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 12 - 1918 மறைவு 23 - 04 - 2002

**அமரர் கார்த்திகேசு முருகப்பா**
(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: ஏகாதசி

அன்பால் அரவணைத்து ஆதரவு வார்த்தை கூறி
அறிவால் எம்மை உயர வைத்து
பண்புடன் வாழவைத்த எம் உத்தமரே!
ஈராண்டுகள் சென்றாலும் ஆறுமே ஆறாது
எம்மனது ஆறாது!
உங்கள் உடல் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நெஞ்சில் நிலைத்திருக்கும்!

கச்சாய் வடக்கு,
கொடிகாமம். (3-33-38-14-9) - குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 - 08 - 1928 மறைவு 12 - 05 - 2003

**நமசிவாயம் சுந்தரலிங்கம்**


திதி: ஏகாதசி (30.04.2004)

சுந்தரமாய் நீங்கள் விளங்கி
சுகத்தையே அள்ளி வழங்கி
ஓர் திங்கள் உதிர்ந்து
ஓர் ஆண்டை நிறைவு செய்து
ஒரு போதும் மறவாது உம் துயரால் வாடும்:

'மல்லிகா பவனம்',
இணுவில் கிழக்கு,
இணுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(31365)(42-14-19)

## உத்தரக் கிரியை அழைப்பு



தோற்றம் 11 - 06 - 1956 மறைவு 16 - 04 - 2004

தாரண வருடம் சித்திரை மாதம் (16.04.2004)
வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் சகோதரன்

**அமரர் கந்தப்பச்செட்டியார் அசோகன் செட்டியார்**

அவர்களின் வீட்டுக் கிருததியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (01.05.2004) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

160, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.க.வைத்திலிங்கச் செட்டியார்,
திரு.க.ரமேஸ் செட்டியார்
(சகோதரர்கள்). (31439)(40-14-19)

# இன்னல்களின் மத்தியிலும் யாழ். மக்கள் மன உறுதியுடன் வாழ்வது பெருமைக்குரியது!

## யு.என்.எச்.சி.ஆர். வதிவிடப் பிரதிநிதி பாராட்டு

வரணி,ஏப்.30

யாழ். மாவட்ட மக்கள் யுத்தத்தால் இன்னலுற்றபோதும் மன உறுதியுடன் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்றனர். இது குறித்து நான் பெருமிதமடைகிறேன்.

- இவ்வாறு புகழ்ந்தார் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் யாழ். மாவட்ட வதிவிடப்பிரதிநிதி கே.சி. சூசிமுரட்டா.

'சொணட்' அமைப்பின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளுடான சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவானது. அப்போது இங்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். இதன் காரணமாக இங்கு எமது அமைப்பு சேவையாற்ற அச்சமயம் பொதுமக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களைத் திரும்பவும் வரவழைத்து மீள்குடியமர்த்த வேண்டிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அது சாத்தியமாகவில்லை என்பதோடு தொடர்ந்தும் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இங்கு நாம் தொடர்ந்தும் சேவையாற்றுமாறு கேட்கப்பட்டோம்.

இலங்கையில் இனப்பிரச்சினை சார்பான கலவரங்களினாலும் தொடர்ந்து ஏற்பட்ட யுத்தத்தினாலும் பொதுமக்கள் பலர் இடம்பெயர்ந்து பல பாகங்களிலும் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவுவதே எமது பிரதான கடமையாகும். நாம் பல நாடுகளில் சேவை செய்துள்ளோம். ஆனால் யாழ் மாவட்ட மக்கள் யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வு மற்றும் அசாதாரண சூழ்நிலை போன்ற பல இன்னல்களுக்கு மத்தியிலும் மன உறுதியுடன் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். இது குறித்து நான் பெருமிதமடைகின்றேன்.

சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் யுத்த அபாயம் ஓரளவு நீங்கியுள்ளது. அதன் பின் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு நாம் அரச அதிபர் ஊடாகப் பலவித உதவிகளைச் செய்கின்றோம். நிலைமை இப்போது ஓரளவு சரடைந்துள்ளது. எமது அமைப்பு கடல்சார் தொழிலாளர்களுக்கான கடன் வசதிகளையும், கிராமிய மட்டத்தில் விதவைகள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் முன்னேற்றம் கருதி உதவிகளையும் வழங்குகின்றோம். செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, யுனிசெவ், ஐநா.அபிவிருத்தித்திட்டம் போன்ற அமைப்புக்களும் அகதிகளுக்கு உதவுகின்றன. கட்டுமானப் பணிகளுக்கு நோராட் மற்றும் உலக வங்கி போன்றவும் உதவி புரிகின்றன.

இங்கு பல அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்குகின்றன. இவற்றுக்குள் ஒரு கூட்டமைப்பு இல்லை. தாங்கள் விரும்பியபடி வேலைத்திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துகின்றன. மேலும் அகதிகளுக்கு உதவும் செயற்பாடுகளில் மனித உரிமை ஆணைக்குழுவினருடன் இணைந்து செயற்படுகின்றோம். அரசின் செயற்பாடுகள், புலிகளின் செயற்பாடுகள் இவற்றையும் நாம் கண்காணித்து வருகின்றோம் சட்ட ஆலோசனைகள் ஆகியவற்றையும் நடைமுறைப்படுத்துகின்றோம் என்றார் அவர்.

இங்கு சமுகமளித்திருந்த அங்கத்தவர்கள் தங்களுக்குள்ள பல பிரச்சினைகளை முன்வைத்தனர். அவர்களுக்கு வதிவிடப்பிரதிநிதி பதிலளித்தார். (ஒ-170)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.30

மல்லாகம் பத்திரகாளி அம்பிகா சமேத வீரபத்திர சுவாமி கோயில் வைரவர் நூதன, பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும் வசந்த மண்டபத் திறப்பு விழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணி தொடக்கம் 7.30 மணிவரையான சுப நேரத்தில் இடம்பெறவுள்ளன. (10)

★ ★ ★

நவாலி,ஏப்.30

ஆனைக்கோட்டை காசி காண்ட மடம் ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி சிவன் கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.27 மணி முதல் 8.27 மணி வரையான சுபநேரத்தில் இடம்பெறும்.

பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நாளை சனிக்கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும்.(10-100-85)

★ ★ ★

வட்டுக்கோட்டை,ஏப்.30

வட்டு. மேற்கு பேச்சியம்மன் ஆலயப் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.14 மணி தொடக்கம் 7.31 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (10-161)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.30

இளவாலை, சித்திரமேழி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 6 மணிக்கு 'விநாயகர் புராணம்' என்னும் பொருளில் சைவப் புலவர் நித்திய தசீதரனின் சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது. (10-ரி)

★ ★ ★

நவாலி,ஏப்.30

ஆனைக்கோட்டை, உயரப்புலம் ஸ்ரீஉத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10-100)

## கட்டடத் தொகுதி திறப்பு விழா

குருநகர்,ஏப்.30

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத் தொகுதி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ள இத்திறப்பு விழா நிகழ்வில் யாழ். மறைமாவட்டத்தின் இளைப்பாறிய முன்னாள் குருமுதல்வர் வண.பிதா எஸ்.செல்வராஜா அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டடத் தொகுதியைத் திறந்துவைப்பார். (ஒ-51)

## ஞானச்சுடர் வெளியீடு

குடத்தனை,ஏப்.30

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சைவகலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் ஏப்ரல் மாத வெளியீடு இன்று ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டுரையை லயன் ரீ.கிருஷ்ணராசாவும் மதிப்பீட்டுரையை செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேலும் நிகழ்த்தவுள்ளனர். (10-ரி-173)

## அம்பாளுக்கு நாகம் உருவாக்கம்

சுழிபுரம்,ஏப்.30

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்குப் பக்தர்கள் வழங்கிய தங்க நகைகளைக் கொண்டு புதிய நாகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வருடாந்த திருவிழாவின்போது புதிய நாகம் அம்பாளுக்கு சாத்தப்படவுள்ளது. (10-28)

## ஆலயம் புனரமைப்பு

வலி. தென்மேற்கு,ஏப்.30

கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இவ்வருடாந்த மஹோற்சவம் இவ் ஆலயத்தில் நடைபெறவில்லை. கருவறை, வசந்த மண்டபம் என்பன பல லட்ச ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

# ஆலயத்தில் சிலை பிரதிஷ்டை

யாழ்ப்பாணம்,ஏப்.30

சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் ஆலயத்திலுள்ள சின்னத்தம்பி புலவரின் சிலை மீண்டும் புனரமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கல்வளை விநாயகர்மீது "கல்வளையந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவரின் - சிலை தரிசன மண்டபத்தில் அமைந்திருந்தது.

கடந்த கால யுத்தச்சூழ்நிலையில் இந்தச்சிலை சிதைவடைந்திருந்தது.

தற்போது சிலை புனரமைக்கப்பட்டு ஆலயத் தீர்த்த மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. (ஒ-ரி)

# ஆணவமறுத்து நற்கதியடைவோம்!

ஆன்மாவை நிர்மூலமாக்குவது ஆணவமாகும். இந்த ஆணவமானது மும்மலங்களில் முதலாவதாகக் காணப்படும். இதற்கு மூலமலம், இருளமலம், சகசமலம் எனவும் பெயர்கள் உண்டு. நெல்லில் உமிபோலவும், செம்பில் களிம்பு போலவும் ஆன்மாவைப் பற்றி நிற்பது இதன் இயல்பாகும்.

ஆன்மாவின் அழிவுக்கு மூலமாக அமைவதால் மூலமலம் எனவும், இருளைப்போல் ஆன்மாவிடமுள்ள அறிவை மறைப்பதால் இருள்மலம் எனவும் ஆன்மாவோடு பிரியாது கூடியிருப்பதால் சகசமலம் எனவும் இந்த ஆணவம் அழைக்கப்படும். இந்த ஆணவமானது ஆன்மீக விடுதலைக்குப் பிரதான தடையாகக் காணப்படுகின்றது. இதனால் இதனை இருளிலும் கொடியது என்பர்.

*"ஒரு பொருளும் காட்டாது இருளுருவங் காட்டும்*
*ஒரு பொருளும் காட்டாது இது"*

என்று 'திருவருட்பயன்' ஆணவத்தைக் குறிப்பிடுகிறது.

மும்மலங்களில் ஆணவமானது அனைவரையும் பற்றி நிற்கின்றது. பிரளயாகலருக்கு ஆணவம், கன்மமும் விஞ்ஞானகலருக்கு ஆணவமும் காணப்படும்.

## ஞானக்கதிர்

ஆணவமானது விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்னும் எட்டுக் குணங்களைக் கொண்டது.

இந்த ஆணவத்தை ஆன்மா அறுப்பதற்கு இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் என்ற சைவநாற்பாத நிலைகள் மூலம் ஆணவத்திலிருந்து விடு தலைபெறும்.

*சரியையில் ஆணவம் கால்*
*சரித்திடும்*
*கிரியையில் அரைமலம்*
*கெடுதியுற்றிடும்*
*மருவு யோகத்தில் முக்கால்*
*மருவிடும்*
*விரி சிவஞானத்தில் முற்றும்*
*பிரியுமே*

சரியை நெறியைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஆணவத்தில் காற்பகுதியும் கிரியை நெறிமூலம் அரைப்பகுதியும் யோகநெறியில் முக்காற்பகுதியும் ஞானநெறியில் ஆன்மாவில் இருந்து ஆணவம் அறுந்துவிடும் என்பது இதற்குப் பொருளாகும்.

**சி. சுதர்சன்**

இதன் மூலம் ஆன்மாவானது முத்திப்பேரின்பத்தை அடையப்பெறும். நாமும் இந்நெறிகளில் நின்று இறைவனைப் பிரார்த்தித்து ஆணவத்தை அறுத்து முத்திப் பேரின்பத்தை அடையப் பெறுவோம். ✳

## தெய்வீக ஸ்தலங்களில்



மாதகல் - பாணாவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத் திருவிழாவின்போது ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் தேரில் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: மாதகல் செய்தியாளர்)*



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வின்போது கனடா புகழ் விநாசித்தம்பி சண்முகம் ஆசிரியரின் மாணவர்களாகிய கனடாவைச் சேர்ந்த ஜெயகுலசிங்கம் பிரகாஷ், ஜெயகுலசிங்கம் லக்சுமி சகோதரர்கள் இன்னிசைக் கச்சேரி நடத்திய வேளை மாணவி ஒருவரால் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



காரைநகர், மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற மஹோற்சவத்தின்போது காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தினால் இசைக்கச்சேரி நடத்தப்பட்டது. இதில் கலாமன்ற ஆசிரியை இசைக்கலைமாணி செல்வி ஐ.சிவகலா இசைக் கச்சேரி நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். *(படம்: காரைநகர்ச் செய்தியாளர்)*



உடுவில் - மல்வம் பகுதியில் அமைந்துள்ள கந்தசுவாமி ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின்போது தொடர் சொற்பொழிவாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனுக்கு சிவஸ்ரீ கா.குகானந்தக் குருக்கள் காளாஞ்சி வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் வீடுகளுக்குக் கூரை விரிப்புகள்

## யு.என்.எச்.சி.ஆர். வழங்குகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.30

குடாநாட்டில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தால் அமைக்கப்பட்ட வீடுகளிற்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான கூரை விரிப்புக்களை அந் நிறுவனம் தற்போது வழங்கி வருகிறது.

இந்த நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளின் கூரைப் பகுதி கிடுகு, சிமெந்துசீற் என்பவற்றைக்கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. தற்போது நிலவும் வெய்யில் காரணமாக இந்த வீடுகளின் உள்ளே வெப்பம் அதிகமாக உள்ளது. இதனைத் தணிப்பதற்கே இந்தக் கூரை விரிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பன்னாலை, இளவாலை ஆகிய பகுதிகளில் தற்போது இக்கூரை விரிப்புகள் வழங்கப்பட்டன. நேற்று முன்தினம் எழுதுமட்டுவாள் பகுதிக குடியிருப்புக்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. அம்பன், குடத்தனை, கோப்பாய், உடுவில் காரைநகர் - நீலங்காடு, கல்விளான் போன்ற பகுதிகளுக்கு இனி வழங்கப்படவுள்ளன. (ஒ-6)

# பொகந்தலாவையில் வெள்ளத்தால் 14 குடும்பங்கள் வீடுகளை இழந்தன

மஸ்கெலியா,ஏப்.30

பொகந்தலாவைப் பிரதேசத்தில் கொட்டியகலத் தோட்டத்தின் கீழ்ப் பிரிவிலிருந்த தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் பாதிப்புக்குள்ளான 14 குடும்பங்கள் தோட்ட நூலக மண்டபத்தில தஞ்சமடைந்துள்ளன.

பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட பல ஏக்கர் நிலப்பரப்பு ஏற்கனவே வெள்ளப்பெருக்குகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தத் தடவை போன்று தமது உடைமைகளைக்கூட எடுக்க முடியாதளவுக்கு வெள்ளத்தால் முன்னர் தாம் பாதிக்கப்படவில்லையெனத் தொழிலாளர் கூறுகின்றனர்.

இப்பிரதேச மக்களுடைய கால்நடை லாயங்கள், மரக்கறித்தோட்டங்கள், விளைச்சல் நிலங்கள், போன்றவையும் பாதிப்புற்றிருக்கின்றன. பாதிக்கப்பட்ட இரத்தினக்கல் தொழிலாளருக்குப் பிரதேச இளைஞர்கள் உதவிகளை வழங்கியுள்ளனர்.

அந்த மக்களுக்கு அம்பேகமுவ பிரதேசத் தலைவர் வி.லோகநாதன் மற்றும் சபை உறுப்பினர் எம்.உத்திரசேனன் ஆகியோர் தற்காலிகமாக வதிவிடங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். பொகந்தலாவ வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.லோகநாதனால அவர்களுக்கு உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஒ-ரி)

## சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தின்

# நிவாரண விநியோகக் கிளைகள் குறைந்ததால் மக்கள் சிரமம்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் நிவாரணப் பொருள் விநியோகக் கிளைகளின் எண்ணிக்கையைத் திடீரெனக் குறைத்துள்ளது. இதனால் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதுவரை காலமும் அதன் சகல கிளைகளிலும் தனது நிவாரண விநியோகப் பணிகளை நடைமுறைப்படுத்தி வந்தது. இம்மாதம் தொடக்கம் மேற்படி சங்கம் தனது சில குறிப்பிட்ட கிளைகளுடாக மட்டுமே நிவாரண விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். இதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக நிவாரணம் பெறும் பொதுமக்கள சிலர் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையால் பெருந்தொகை மக்கள் ஒரு குறிப்பிட்ட கிளையிலேயே நிவாரணத்திற்காகத் திரளுவதால் அதிக நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் -

வெய்யிலில் வயது முதிர்ந்தோரும், தாய்மாரும் நீண்டதூரம் நடந்து வந்து நிவாரணத்தைப் பெறவேண்டியுள்ளதாகவும் - பொதுமக்கள் குறை கூறுகின்றனர்.

அதேவேளை, நிவாரணப் பொருள் விநியோகத்தில் 100 கிராம் தேயிலைப பக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் - அத்தேயிலை நீண்ட காலமாக இருப்பிலிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது (ஒ-150)


## வில்லூன்றி புனித தீர்த்தம்

சித்திரா பூரணைப் பெருவிழா

04-05-2004 செவ்வாய்க்கிழமை

* தீர்த்தோற்சவம்

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை.
காலை 8.00 மணி தீர்த்த வாரி.
காலை 9.30 மணி வரை தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகம்.
காலை 9.30 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்.

* பிதிர்க்கடன்கள்

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்.

(31447) (21-14-16)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 12 - 1964



மறைவு 30 - 04 - 2000

ஓவியச் செல்வன்

### குணம் ஆட்ஸ்

குணம் என்னும் குலவிளக்கு அணைந்து
நான்கு ஆண்டுகள் மூழ்கியதோ உன் நினைவலைகள்

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(31432) (26-21-14)

நினைவுகூரும்:
- குடும்பத்தினர்.


## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல் 25

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (நிக்கொட்) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒருபகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (NECORD) கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தத்திற்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD/HS/13 | பொதுவைத்தியசாலை நிர்மாணம், கிளிநொச்சி கட்டம்-1 | M2 | 1,750,000 |

3. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பநதகாரர் பதிவுத் தரப்படுத்தலின் கீழ் M2 (கட்டடங்கள்) அல்லது அதற்கு மேலான தரத்தில் தம்மை உள்ளூர் ஒப்பந்தகாரர்களாகப் பதிவுசெய்து கொண்ட எல்லா கம்பனிகளுக்கும் இலங்கை தேசிய ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் (NCCASL) அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடொன்றைச் சார்ந்த வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளன.

4. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி சம்பந்தமான மேலதிக தகவல்களைத் *திட்டப்பணிப்பாளர், 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை* என்னும் முகவரியில் பெற்றுக்கொள்வதோடு, கேள்வி ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம்.

   தொ.பே: 026-2227434 பக்ஸ்: 026-2227401
   ஈமெயில்: necord@sltnet.lk

5. ஒப்பந்த ஆவணங்களை 2004 மே மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 2004 மே மாதம் 31ஆம் திகதி வரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இதுதொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 10,000/= ஐச் (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

6. கேள்வி கோருபவர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 7ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட திகதி, நேரத்தில் ஒக்கயளிக்கப்பட வேண்டும்.

7. அவ்வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் *தலைவர், ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச சபை, NECORD 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை* என்ற முகவரிக்கு 2004 ஆனி மாதம் 21 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

8. முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் ஆனி மாதம் 01ஆம் திகதியன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

9. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**எஸ்.ரங்கராஜா,**
**பிரதம செயலாளர்,**
**தலைவர்,**
**ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை,**
**வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்),**
**திருகோணமலை.**

(சி-34807)(34-14-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடக்குமுறைகளை உடைத்தெறியும் வகையில்

# சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் ஒற்றுமைக்கு நாளைய மே தினம் முதற்படியாக அமையட்டும்!

### தமிழ்க் கூட்டமைப்பின் இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

அடக்குமுறைகளை உடைத் தெறியும் வகையில் சிங்களத் தமிழ் தொழிலாளர்கள் ஒற்றுமைக்கு நாளைய மே தினம் முதற்படியாக அமையட்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைப் பாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) பொதுச் செயலாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.

இது தொடர்பாக அவர் வெளி யிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

மே தினம் என்பது அடக்கப்பட்டு அடிமைகளாக இருந்த தொழிலாளர் வர்க்கம் வீறு கொண்டெழுநது தமது உரிமைகளைப் பெற்ற தினமாகும். தொழிலாளியானவன் நாளாந்தம் 8 மணி நேரம் தான் வேலை செய்ய முடியும் என்பதை உலகுக்குணர்த் திய தினமாகும். 8 மணிநேரம் தான் வேலை செய்யமுடியும் என்ற உரிமை யையும் அவ்கள் சாதாரணமாகப் பெற்று விடவில்லை. அதற்கும் அவர்கள் இரத்தம் சிநதி பல உயிர்களை விலை யாகக் கொடுத்தபின்பே அவ்வுரிமை யைப் பெற்றார்கள்.

தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தால் அடக்கப்படுவதும் சிறு பான்மைத் தேசிய இனங்கள் பெரும் பான்மைத் தேசிய இனங்களால் அடக் கப்படுவதும், அவர்கள் தமது உரிமை களுக்காகப் போராடுவதும், மனித சமுதாயத்தில் தொடர்ச்சியாக நடை பெற்றுவரும் பேராட்டங்களையும், மாற்றங்களையுமே குறித்து நிற் கின்றது.

இதைப்போலவே ஈழத்துத் தமிழ்த தேசிய இனமும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகத் தனது உரிமைப் போராட்டத்தை நடத்தி வரு கின்றது. தமிழர் தாயகமான வடக் கும் - கிழக்கும் ஆயிரக்கணக்கான போராளிகளதும், பொதுமக்களதும் இரத்தத்தால் சிவந்துபோயும் கூட, சிங்கள தேசம் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குக் கௌரவமான தீர் வைக்காண முன்வரவில்லை.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் ஓர் கௌரவ மான தீர்வைக்காண்பது என்பதை நோக்கமாகக் கொண்டு தமிழர் தரப்பின் சார்பில் தமிழீழ விடுதலைப புலிகள் சிங்கள அரசுடன் பேச்சு நடத்தினார்கள். நிரந்தரத் தீர்வுக்கு முதற்கட்டமாக இடைக்காலத் தன் னாட்சி அதிகார சபைக்கான ஆலோச னைகளையும் முன்வைத்தார்கள். ஆனால், அவற்றைப் பரிசீலிப்பதற் குப் பதிலாக நாடாளுமன்றத்தைக் கலைத்து, ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்தி, தனது சொந்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தவே ஜனாதி பதி முயற்சி செய்தார்.

ஆனால், பெரும்பான்மை பல மில்லாத நிலையில், சிங்கள, பௌத்த இனவாதிகளின் கூட்டுடன் உருவாக் கப்பட்டுள்ள ஓர் ஸ்திரமற்ற அரசு தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமா? என்ற நிலையில், சர்வதேச சமூகத் தின் அழுத்தம் காரணமாகவும், அவா களின் ஆதரவைப் பெற்றுக்கொள் வதற்காகவும் ஜனாதிபதி மீண்டும் பேச்சுக்காக நோர்வேத் தரப்பை அழைத்துள்ளார். இப்பேச்சை ஜனாதி பதி உண்மையாகவே விரும்புகின் றாரா? இவருடன் கூட்டாக உள்ள சிங்கள் பௌத்த பேரினவாத சக்திகள இப்பேச்சுக்கு ஆதரவாக இருக்குமா போன்ற கேள்விகள் எழுந்துள்ள சூழ்நிலையில் தான் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சி தினமான மே தினம் வருகின்றது.

இத்தொழிலாளர் தினத்தில் தமிழ்த தேசிய தொழிலாளர்கள் மாத்திர மல்லாமல் ஒட்டுமொத்தமான தமிழ் இனமும் கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப் புக்குக் கொடுத்த ஆணையை, அதா வது தமிழ் மக்களின் தாயகம், தேசியம், அவர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அரசு கௌரவமான தீர்வொன்றிற்கு முன்வரவேண்டும் என்பதை இம் மேதினத்தினூடாக சிங்கள தேசத் திற்குக் கூறிவைப்போம்.

கடந்தகால யுத்தம் என்பது தமிழ்த்தேசியத் தொழிலாளர் வர்க் கத்தை மிக மோசமாகப் பாதித் துள்ளது. விவசாயிகள், கடற்றொழி லாளர்கள், கூட்டுறவாளர்கள் என அனைத்து வகைத் தொழிலாளர் களுமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன னும் தனது சொந்த நிலத்தில் விவ சாயம் செய்யமுடியாமல், சொந்த வீட்டுக்குப்போகமுடியாமல், மீன்பிடிக்க முடியாமல் இருக்கின்றது. இராணுவ ஆக்கிரமிப்பும், உயர்பாதுகாப்பு வலய அச்சுறுத்தல்களும் தமிழ்த் தொழி லாளர் வர்க்கத்தை மிக மோசமாகப் பாதித்துள்ளன. சிங்கள அரசின் இந்த அடக்கு முறையை உடைத்தெறிய முன்வரும்படி உழைக்கும் சிங்கள வர்க்கத்திற்கு, தமிழ் மக்கள் சார்பாக அழைப்பு விடுக்கின்றோம். சிங்கள-



தமிழ் தொழிலாளர் ஒற்றுமைக்கு இதுவே முதற்படியாக அமையும் எனவும் நம்புகின்றோம்.

உலகத் தொழிலாளரின் எழுச்சித தினம் ஈழத் தமிழ் மக்களின் எழுச் சித் தினமாகவும் அமையவேண்டும் என்பதுடன் தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளைப் பெற்று, தன்னாட்சியுடன் வாழ்வதற்கு சர்வதேச சமூகமும் தனது உறுதியான ஆத ரவை வழங்கவேண்டும் எனவும் கோருகின்றோம்.

நாளை யாழ். வீரசிங்கம் மண்ட பத்தில் நடக்க இருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் மே தினக் கூட் டத்தில் கலந்துகொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின் றோம் - என்றுள்ளது.

## இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் வழங்க வலியுறுத்துவோம்

### தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

வடக்கு - கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்க வேண்டும் என் பதை வலியுறுத்த மேதின நிகழ்வில அனைத்துக் கல்விப்புலம் சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள் ளது.

மே முதலாம் திகதி நடைபெற வுள்ள உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இலங்கை தமிழராசிரியர் சங்கம் சார்பாக அதன் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இரண்டாயிரமாம் ஆண்டு இலங் கைத் தமிழராசிரியர் சங்கம் யாழ்ப் பாணம், திருகோணமலை, மட்டக்க ளப்பு, கிளிநொச்சி போன்ற மாவட் டங்களில் நடத்தப்பட்ட சங்கத்தின் வருடாந்த மாநாடுகளில் தமிழ் இனத தின் சுயநிர்ணய உரிமை, தமிழர் தாயகம், விடுதலைப் புலிகள் மட் டுமே தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்ற தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை வலியுறுத்தியது. அத்துடன், இவற்றின் அடிப்படையி லேயே அரசின் சமாதானப் பேச்சுக் கள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அதன் பின்னர் விடுதலைப் புலிக ளுடனான சமாதானப் பேச்சை அரசு ஆரம்பித்தது. விடுதலைப் புலிகளி னால் இடைக்கால வரைவு கடந்த அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வரைவை ஏற்று இடைக்கால நிர் வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க அரசு முன்வரவேண்டும்.

எனவே, இந்த வருட மே தினம் விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை அரசு வழங்க வேண் டும் என்ற முக்கிய கோரிக்கையின் அடிப்படையில் நடைபெறவுள்ளது. ஆகவே, கல்விப்புலம் சாந்த அதிபர் கள், ஆசிரியர்கள் யாவரும் தொழி லாளர்கள் என்ற வகையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை நடை பெறவிருக்கும் மேதினக் கூட்டத்தில் அணிஅணியாகத் திரளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

## உழைக்கும் வர்க்கத்தின் விடிவுக்கு சோசலிச அமைப்பை உருவாக்க வேண்டும்

### ஐக்கிய சோஷலிசக் கட்சி அறைகூவல்

உழைக்கும் வர்க்கத்தின் விடிவுக கான சோசலிச அமைப்பை உரு வாக்குவோம்.

ஐக்கிய சோலிசக் கட்சி மேதினம் தொடர்பாக வெளியிட்ட பத்திரிகைச செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப் பிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:-

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பிரதான மே தின எழுச்சி நிகழ்வு கொழும்பில் நடைபெறவுள்ளது. எழுச்சி ஊர்வலம் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஒறுகொடவத்தையில் இருந்து ஆரம்பமாகும். எழுச்சிக் கூட் டம் மாலை 5 மணிக்கு கொஸ்கூஸ் சந்தியில் நடைபெறும்.

ஐக்கிய சோஷலிசக் கட்சி முதல தடவையாக நாடளாவிய ரீதியில் தனித் துப் போட்டியிட்டு நாட்டின் 4ஆவது அரசியல் சக்தியாக அமைவதற்கு ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் முதலாவதாக கட்சியின் சார்பில் நன் றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இம்முறை மே தினம் இடம்பெறுவது, முன்னொருபோதும் இல்லாதவாறு நாட்டில் பாரிய அரசியல் சர்ச்சை தோன்றியுள்ள காலகட்டத்திலாகும்.

ஸ்ரீல.சு.கட்சி மற்றும் மக்கள் விடு தலை முன்னணிக் கூட்டு ஆட்சியை அமைத்தபோதிலும், மிகவும் சாத் திய நிலைப்பாடற்ற ஆட்சி நிலை யையே காணக்கூடியதாகவுள்ளது. சமாதானப் பேச்சுக்கள் உள்ளிட்ட கூட் டமைப்பின் மூலம் அளிக்கப்பட்ட கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி வலியுறுத்துவதற் காக மக்கள் அமைப்புகளை முன்னெ டுக்கவேண்டியுள்ளது. தற்போதைய நிலையைப் பயன்படுத்தி ஐ.தே. கட்சி அதற்குச் சாதகமான நிலையை உரு வாக்க முயற்சிக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் முத லாளித்துவத்திற்கு மீண்டும் இடமளி யாது, மக்கள் போராட்டமூடாகச் சோஷலிச மாற்றுச் சக்தியைக் கட்டி யெழுப்பவேண்டிய காலம் தோன்றி யுள்ளது. அதன் ஒரு கட்டமான இந்த மேதின நிகழ்வில் உழைக்கும் வர்க் கத்தின் விடிவுக்கான சோஷலிச அமைப்பை உருவாக்க அணிதிரளும் படி அனைவரையும் கேட்டுக்கொள்கின் றோம் - என்றுள்ளது. (ஒ)

### புதிய ஜனநாயகக் கட்சியின் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

புதிய ஜனநாயகக் கட்சியின் மேதி னக் கூட்டம் யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

நாளை காலை 10 மணிக்கு ஆரம் பமாகும் இக்கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தி வேல், சட்டத்தரணி சோ.தேவராஜா, ச.தணிகாசலம், கா.கதிர்காமநாதன் உட்படப் பலர் உரையாற்றவுள்ள னர்.

இதேவேளை, இக்கட்சியின் மேதின முக்கிய கூட்டம் நுவரெ லியா ராகலையில் இடம்பெறவுள் ளது.

இக்கூட்டத்தில் இக்கட்சியின் முக் கியஸ்தர்கள் உரையாற்றவுள்ளார் கள். (ஒ-12)

## தமிழ்த் தேசியத்தை வளப்படுத்த மேதினத்தன்று அணி திரள்வீர்!

### கூட்டுறவுச் சமாசம் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

தமிழ்த் தேசியத்தை வளப்படுத்த மேதினத்தன்று அணிதிரள்வீர்

- இவ்வாறு யாழ். மாவட்ட விவ சாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசம் மேதிம் தொடாபாக வெளி யிட்ட செய்திக் குறிப்பில் அழைப்பு விடுத்துள்ளது.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

உழைக்கும் வர்க்கத்தின் உன் னத நாளாகிய மேநாளை சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குதலிலிருந்து தமிழ்த் தேசிய இனத்தின் விடுத லைக்கான பயணிப்பை வளப்படுத்து வதற்கான அர்ப்பணிப்பு நாளாக உழைக்கும் வர்க்கத்தினர் முன்னெ டுத்துள்ளார்கள்.

எமது அர்ப்பணிப்பு நிறைந்த விடுதலைப் பயணத்தில் எத்தனையோ இடர்கள் சூழ்ந்தபோதிலும் நாம் வீறுகொண்டெழுந்தோம். இன்னும் எழுவோம் என்பதனை மெய்யாக்கும் வகையில் எமது இன எழுச்சியை மே நாளன்று உலகிற்குப் பறைசாற்றுவோம்

எனவே, மே நாளன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெறும் மே நாள் விழா வில் அனைவரும் கலந்துகொள்ளு மாறு வேண்டுகோள் விடுக்கின்றோம - என்றுள்ளது. (ஒ)

## இ.தொ.காவின் மேதினக் கூட்டம் இம்முறை பண்டாரவளையில்

இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸின் மே தினக் கூட்டம் இம்முறை பண்டாரவளை நகரில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸின் தலைவரும், பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்ட மான் தலைமை தாங்குவார். மேலும் உதவித் தலைவர்கள், நிதிக்காரிய தரிசி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபைத்தலைவர், உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள்.

மலையக மக்கள் முன்னணியின மேதினக் கூட்டம் இம்முறை புஸ் ஸல்லாவ நகரில் வெகுசிறப்பாக நடை பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான பெ.சந்திரசேகரன் தலைமையில கூட்டம் நடைபெறவுள்ளது.

அக்கூட்டத்தில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராதா கிருஷ்ணன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப பினர்கள், கட்சியின் செயலாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இடதுசாரிகளின் [illegible] முன்ன ணிக் [illegible] கட்சிகளின் மேதினக் கூட்டம் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இடதுசாரி கட்சிகள அனைத்தினதும் ஒன்றுகூடல் வைபவ மும், கட்சிகளின் எதிர்கால நடவடிக் கைகளும் அன்றையதினம் ஒன்றுகூடி தீர்மானிக்கப்படும் எனக் கட்சிப் பிரதி நிதி கூறினார். (க)

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை உலகுக்குணர்த்த ஒன்று கூடுவோம்!

### சிகை ஒப்பனையாளர் சங்கம் தெரிவிப்பு

தமிழ் மக்களின் அபிலாஷைகளை உலகுக்குணர்த்த மே தினத்தில் ஒன்று கூடுவோம்.

- இவ்வாறு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கம் வெளி யிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

[illegible] தாகத்திற்காக ஏங்கிக் கொண்டிருக் கின்றோம். தற்போதைய சமாதானச் சூழலில் எமது அபிலாசைகளை நிறைவேற்ற தன்னாட்சி அதிகாரங் களுக்காகப் போராடிக்கொண்டிருக் கிறோம். இவ்வேளையில், எமது மக் களின் அபிலாஷைகளை உலகத்துக்கு எடுத்துச் சொல்லும் வகையில் யாழ். மாவட்டத்திலுள்ள சிகை ஒப்பனையா ளர்கள் அனைவரும் யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு நாளை பிற்பகல் 3 மணிக்கு வருகைதந்து மே தின எழுச சிக்கூட்டத்தில் பங்கேற்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

### சலனசித்திரம் அமைப்பின் மேதினம்

'சலன சித்திரம்' திரைக்கலை அமைப்பு தனது மேதினக் கூட் டத்தை கொழும்பு வெள்ளவத்தை பொதுச்சந்தை மைதானத்தில் நாளை காலை 10 மணிக்கு நடத்த உள்ளது.

இனமத பிரதேச வேறுபாடுகளுக் கப்பால் உழைக்கும் கலைஞர்களின் உரிமைக்குரலாக ஒலிக்கும் இக் கூட்டத்தில் அனைத்துக் கலைஞர் கள் மற்றும் கலை ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவு தரும் ஆயுதங்கள் தொடர்பான ஐ.நா. பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றம்!

நியூயோர்க், ஏப்.30

பேரழிவுதரும் ஆயுதங்கள் தீவிர வாதிகளின் கைகளில் கிடைக்காமல் இருப்பது தொடர்பான ஐ.நா. தீர்மானம் பாதுகாப்புச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி ஐ.நாவில் அங்கத்துவம் பெற்றுள்ள அனைத்து நாடுகளும், பேரழிவு ஆயுதங்களைத் தீவிரவாதி களுக்குக் கிடைப்பதைத் தடுக்கும் வகையில், கறுப்புச் சந்தை வியாபாரிகள் இத்தகைய ஆயுதங்களை வாங்குவதையும் விற்பதையும் தடுக்கும் வகையிலும் சட்டங்களை இயற்றவேண்டும்.

கடந்த ஆண்டு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ, பேரழிவு தரும் ஆயுதங்களுககு எதிராக சர்வதேச சட்டங்களை இறுக்கமாக்கும் வகையிலான பிரேரணை ஒன்றை ஐ.நாவில் கொண்டுவருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

உலக நாடுகளின் அரசுகள் தமது ஆயுதங்கள் குறித்து முழுமையாகக கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும். அத்துடன் அவற்றை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்யப்போகிறோம் என்பதையும் வரையறுத்துக் கொள்ளவேண்டும். என்று ஐ.நா.வின் தற்போதைய பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

"உலக சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் தற்போது காணப்படும் அச்சுறுத்தல் குறித்த தனது பிரதி பலிப்பை ஐ.நா. தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது" - என்று பிரேரணை குறித்துக் கருத்து வெளியிட்ட ஐ.நாவுக்கான அமெரிக்கப் பிரதித் தூதர் ஜேம்ஸ் கனின் ஹாம் தெரிவித்தார்.

ஐ.நாவின் இந்தத் தீர்மானத்தை உலக நாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை இரண்டு வருடங்களின் பினனர் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

இந்தத் தீர்மானத்துக்கு இணங்கி வராத நாடுகள் என்று எந்த நாட்டுக்கும் பிரேரணையில் அனுமதி வழங்கப்படவில்லை. (8)

## டயானாவின் சகோதரர் மர்ம மரணம்!

பாங்கொக்,ஏப்.30

இங்கிலாந்தின் மறைந்த இளவரசி டயானாவின் சகோதரர் ஆதம் ஷந்த் கிட், கம்போடிய நாட்டுத் தலைநகர் நாம்பென்னில் தனது வாடகை வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

உலக அரங்கில்

அவருக்கு வயது 50. அவரது உடலைப் பொலீஸார் திங்கட்கிழமை பார்த்தனர். அதிகப்படியான மருந்தின் விளைவால் அவர் இறந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இங்கிலாந்து அரசி குடும்பத்துடன் அவருக்குத் தொடர்புகள் உள்ளதாக நாம்பென்னிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளது.

இளவரசி டயானாவின் தாய் தனது கணவர் பேர்ல் பென்சரைவிட்டு விலகிய பின் பீட்டர் ஷந்த் கிட் என்பவரை மணந்தார். இவர்களின் மகன் தான் இறந்த ஆதம் ஷந்த் கிட். டயானாவும் அவரது உடன் பிறப்புகளும் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள். (8)



வடகொரியாவில் அண்மையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவுப்பொருள்களை தென்கொரியா அனுப்பிவைத்தது. தென்கொரியாவைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் உணவுப் பொருள்களுடன் கப்பல் மூலம் சியோல் நகரிலிருந்து புறப்படும் காட்சி.

## பாகிஸ்தான் இராணுவத்தில் 50ஆயிரம் பேர் ஆள்குறைப்பு

தனது இராணுவப் பலத்தைக் குறைக்க பாகிஸ்தான் முடிவெடுத்திருப்பதாக செய்தியாளர் ஒருவர் புதன் கிழமை தெரிவித்தார்.

முதற்கட்டமாக 50 ஆயிரம் துருப்புக்கள் குறைக்கப்படவுள்ளன. 57 ஆண்டுகால பாகிஸ்தான் வரலாற்றில் அது தனது இராணுவப் பலத்தைக் குறைப்பது இதுவே முதல்முறை.

இராணுவத் தலைவரும் அதிபருமான ஜெனரல் முஷாரப்பின் தலைமையில் நடைபெற்ற இருநாள் உயர் அதிகாரிகள் கூட்டத்திற்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் மிச்சமாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சேமிக்கப்படும் அந்தப் பணம், இருக்கும் படையின் திறனை அதிகரிககவும், இராணுவ மேம்பாட்டுக்கும் செலவழிக்கப்படும் என்று பிரிகேடியர் ஃபயஸ் அகமது சத்திக் கூறினார்.

தற்போது 5லட்சத்து 50ஆயிரம் ராணுவத் துருப்புக்கள் உள்ளன. முதலில் நிர்வாகம் மற்றும் படைக் கலன் பராமரிப்புப் பிரிவுகளில் ஆள் குறைப்பு நடைபெறும் என்று கூறப்படுகின்றது. (8)

## 'கொன்ரெய்னர்களில்' மறைந்து அமெரிக்கா வந்த 189பேர் கைது!

### இவர்களில் 36பேர் பெண்கள்

டக்ஸ்ட்லா கடர்ஸ்,ஏப்.30

இரு 'கொன்ரெய்னர்களில்' ஒளிந்து கொண்டு திருட்டுத்தனமாக மெக்ஸிகோவுக்குள் நுழைய முயன்ற 189 பேரை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

மெக்ஸிகோவின் தென்கோடி மாநிலமான மத்திய சியாபஸில் 18 சக்கர 'டிரக்' வாகனம் சென்று கொண்டிருந்தது. அப்போது அதை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

அதில் பிணைக்கப்பட்டிருந்த இரு கொன்ரெய்னர்களிலும் 134 ஆண்கள், 36 பெண்கள் மற்றும் 19 குழந்தைகள் இருப்பதைக் கண்டறிந்தனர். அவர்களில் 7 வயதுச் சிறுமியும் இருந்தாள்.

கொன்ரெயினருக்குள்ளே வெப்ப நிலை 43 டிகிரி செல்ஸியஸாக இருந்தது என சியாபஸ் சட்டமா அதிபர் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

'கொன்ரெய்னர்கள்' மிக இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. அவற்றைத் திறப்பதற்கு அதிகாரிகள் ஒரு மணி நேரத்தைச் செலிவிடவேண்டியிருந்தது காற்று ஏதும் புகாதவாறு ஓரங்கள், கடினமான பிளாஸ்டிக்கால் அமைக்கப்பட்டிருந்தன.

எனினும், அந்த பிளாஸ்டிக்கில் நிறையத் துளைகளைப் போட்டு காற்று உள்ளே புக வழி செய்திருந்தது அக் கும்பல்.

பிடிபட்டவர்கள் அனைவரும் கௌதமாலா நாட்டைச் சேர்ந்தவர்கள் எனக் கூறினர். மெக்ஸிக்கோ அதிகாரிகள் அதை உறுதி செய்ய முயர்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கௌதமாலாவிலிருந்து அமெரிக்காவுக்குள் நுழைய ஏதுவாக, தென் மெக்ஸிகோவுக்குள் விட்டுவிடுமாறு கடத்தல்காரர்களுக்குத் தாங்கள் பணம் கொடுத்ததாக பிடிபட்டவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

சியர்பஸில் இவ்வாண்டில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் ஊடுருவல்காரர்கள் பிடிபட்டது இதுவே முதன்முறை. (8)

## தனது பிரஜைகள் இஸ்ரேலுக்கு செல்வதைத் தடுக்கிறது அமெரிக்கா

நியூயோர்க்,ஏப்.30

இஸ்ரேலுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு தனது பிரஜைகளை அமெரிக்கா எச்சரித்துள்ளது. அத்துடன் காஸாவில் உள்ள அமெரிக்கர்களை உடன் வெளியேறுமாறும் அது கேட்டுள்ளது.

அமெரிக்கர்களுக்கு எதிராக ஹமாஸ் அமைப்பு தாக்குதல்களை நடத்தக்கூடும் என்பதனால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதாக நாட்டின் வெளிவிவகார அமைச்சு அறிக்கை தெரிவித்தது.

கடந்த வாரங்களில் ஹமாஸ் அமைப்பின் ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்கள் இஸ்ரேலினால் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனால், அங்கு வன்முறைகள் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம் உண்டு என்று அமெரிக்கா கூறுகின்றது.

அமெரிக்கப் பிரஜைகள் பொது இடங்களில் கூடுவதையும் உணவு விடுதி மற்றும் தேநீர்க் கடைகளுக்குச் செல்வதையும் தவிர்த்துக்கொள்ளுமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபரில் அமெரிக்க இராஜதந்திரிகள் பயணஞ்செய்த வாகனத் தொடரணி மீது காஸாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 3 அமெரிக்கர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## பாடசாலை பஸ் விபத்தில் 23 சிறுவர்கள் உயிரிழப்பு!

### கொலம்பியத் தலைநகரில் சம்பவம்

பொகோட்டா,ஏப்.30

கொலம்பியத் தலைநகர் பொகோட்டாவில் பாடசாலை பஸ் ஒன்றும் புல்டோஸர் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 21 சிறுவர்களும் வேறு இருவரும் உயிரிழந்தனர். மற்றைய 36 சிறார்களும் காயமடைந்தனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலைப் பகுதியில் வீதியைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டிருந்த புல்டோஸர் ஒன்று திடீரெனக் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்தது என்று பொகோட்டா சுகாதாரத் திணைக்களம் தெரிவித்தது.

சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து நிலைமையைப் பார்வையிட்ட நகர மேயர் லூயிஸ் எட்வார்டோ கார்ஸீன், "இது ஒரு நாடக பாணியிலான மோசமான துன்பியல் சம்வம்" - என்று தெரிவித்தார்.

கவிழ்ந்துபோன புல்டோஸருக்குள் நசியுண்டு கிடக்கும் பஸ்ஸில இருந்து சிறுவர்களை வெளியே கொண்டுவர பாரிய கனரக இயந்திரங்களை அதிகாரிகள் பயன்படுத்த வேண்டியிருந்தது. மீட்கப்பட்ட குழந்தைகளை அவர்களது குடும்பத்தினருடன் சேர்ப்பதில் பொலீஸார் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததாலேயே புல்டோஸா கவிழந்தது என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (8)

## ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த இருவர் இஸ்ரேலில் சுட்டுக்கொலை!

ஜெருசலேம்,ஏப்.30

மேற்குக்கரையின் வடபகுதியில் நடந்த மோதலில் ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். வேறு நான்கு பலஸ்தீனர்கள் இந்தச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

அவர்களில் ஒருவர் இஸ்ரேலியப படையினரால் மருத்துவமனைக் கட்டிலில் இருந்து இழுத்துப் போட்டுத் தாக்கப்பட்டதில் காயமடைந்தார் என்று கூறப்பட்டது. ஆனால், இராணுவம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்தது. தமது படையினர் மருத்துவமனைக்குள் செல்லவில்லை என்று அது கூறியது.

ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த இருவரும் படையினரைச் சுட முயன்றபோது தாங்கள் திருப்பித தாக்கினர் என்று இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் வழமை போன்று கருத்துத் தெரிவித்ததார்.

இதேவேளை -

இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டதன் 56ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இஸ்ரேலில் ஆரம்பமாகி உள்ளன. கடந்த திங்களன்று வாண வேடிக்கைகள் காலை நிகழ்வுகளுடன் அவை ஆரம்பமாகின.

ஆனால், தொடரும் வன்முறைகளால் கொண்டாட்டங்கள் குறித்து மக்கள் உற்சாகமில்லாமல் இருக்கின்றனர் என்று உள்ளூர் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

56ஆவது நிறைவு ஆண்டுக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் உலகநாடுகளின் பின்புலத்துடன் மத்தியகிழக்கு சமாதானத்துக்காக தயாரிக்கப்பட்ட வழிகாட்டி வரைபடம் இறந்துவிட்டதென்று கூறினார்.

"நான் பலஸ்தீனர்களுடன் பிரத்தியேகமாக ஒப்பந்தமொன்றைச் செயது கொண்டேன். ஆனால் அது சில மாதங்களுக்கு முன்னர். பின்னர் இந்த வழிகாட்டி வரைபடத்தின்படி சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமானதா என்று நான் மீளாய்வு செய்தேன். ஆனால், பலஸ்தீனர் தாங்கள் சொன்னவற்றை முறையாகக் கடைப்பிடிக்கவில்லை" - என்றார் ஷெரோன் (8)

## அந்நியச் செலாவணி கையிருப்பால் ஆசிய நாடுகளுக்கு ஆபத்து வரும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் கோடிக் கணக்கில் அந்நியச் செலாவணியைக் கையிருப்பில் வைததிருப்பதால் அந்த நாடுகளுக்குப் பெரும் பொருளாதாரச் சிக்கல் ஏற்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்திருக்கிறது.

1997 ஆம் ஆண்டின் முடிவில் எல்லா ஆசிய நாடுகளிடமும் மொத்தமாக 49,700 கோடி அமெரிக்க டொலர்கள்தான் அந்நியச் செலாவணி கையிருப்பாக இருந்தது. இப்போது 1.3 டிரில்லியன் டொலர் களாக அது இருக்கிறது. ஒரு டிரில்லியன் என்பது 1,000,000,000,000,000 ஆகும்.

இவ்வளவு பெருந்தொகையை உருப்படியாக முதலீடு செய்யாமல் கையில் வைத்திருப்பதால் வியாபாரிகள் திடீர்திடீரெனப் பங்குச் சந்தைகளில் விலைகளைத் தாறு மாறாக உயர்த்தியும் தாழ்த்தியும் விளையாடுவார்கள். செலாவணி மாற்று மதிப்பு விகிதமும் பெரும் அளவுக்கு மாறும்.

செலாவணி மதிப்பை நிலையாக வைத்திருக்க அரசுகள் எடுக்கும் அன்றாட நடவடிக்கையால் பணப் புழக்கம் அதிகரிக்கும்.

இதனால், கடன் சந்தையில் வட்டி வீதம் குறைந்து பொருளாதாரத்தில் சேமிப்புக் குறையும். இது எதிர்கால [illegible] இதனால் புதிய 'நிதிச் சிக்கல்' ஏற்படும் என்று ஆசிய வளர்ச்சி வங்கி எச்சரிக்கிறது. (8)



விபத்துக்குள்ளான புல்டோஸரும் பஸ்ஸும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் சுயநிர்ணயத்தை வலியுறுத்தி மேதினத்தில் அனைவரும் அணிதிரள்வோம்

## தமிழரசுக்கட்சிச் செயலாளர் அறை கூவல்



யாழ்ப்பாணம்,ஏப்.30

தமிழ்த் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையினை வலியுறுத்தி அதன் அடிப்படையில் ஆட்சி உரிமையினைப் பெற்றுக் கொள்வதற்கு மேதினத்தில் அனைவரும் அணிதிரள்வோம்.

இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார் இலங்கைத்தமிழரசுக் கட்சியின பொதுச் செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா. நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள மேதினம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்க நாட்டின் சிக்காகோ நகரில் எட்டு மணிநேரம் வேலை கேட்டுப் போராடி வெற்றிபெற்ற நாள் மே 1. இதனையே நாடெல்லாம் மே நாளாய் தொழிலாளர் வர்க்கம் கொண்டாடி வருகிறது. காலகதியில் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றித் திருநாளாகவும் தத்தம் அரசியல் பலத்தைக் காட்டுவதற்கும் இம் மே நாளில் பேரணிகளையும் கூட்டங்களையும் அரசுகளும் கட்சிகளும் நடத்தி எழுச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்காகவும் உரிமைக்களை நிலைநாட்டுவதற்கும் கூட மே நாளில் உறுதியுரைகளும், பிரகடனங்களும் வெளியிடப்படுகின்றன.

உழைக்கும் வர்க்கம் 1917 களில ரஷ்ய நாட்டின் மாமேதை லெனின், ஸ்ராலின் தலைமையில், சார் ஆட்சிக்கெதிரான புரட்சிப் போராட்டத்தின் பின் ஆட்சியைக் கைப்பற்றியது. ரஷ்ய நாட்டின் மார்க்காசியப் புரட்சியாளர்கள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளையும் அங்கீகரித்தனர். ஏன் அந்தப் பின்னணியைக் கொண்டு 1971 இல் இலங்கையிலே புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்ட விஜயவீராவும், ஜே.வி.பியும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து நின்றதை நாம் அறிவோம்.

இன்று மார்க்ஸியவாதிகள் என்று கூறிக் கொள்ளும் சில கட்சிகளும், இயக்கங்களும் தமிழ்தேசிய இனத்தின சுயநிர்ணய உரிமையை ஏற்கத் தயங்குகின்றன. பேரினவாத சிங்கள பௌத்த அதிகாரத்தில் மூழ்கி நின்று அடக்கி ஒடுக்கப்படும் தமிழ்த் தேசத்தின் விடுதலைப்போராட்டத்தை எதிர்த்து நிற்பவர்களாய் செயற்படுகின்றனர். பெருமபாலும் பேரினவாதிகளாயின் பாசிசத்தனம் மிக்கவர்களாயும நடந்து கொள்கின்றனர். இதற்கு எதிராக நாம அணிதிரள்வதைத் தவிர வேறுவழியில்லை.

கடந்த இரு தசாப்தங்களில் உலகத தொழிலாளர் வர்க்கத்தின் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வர்க்க குணாம்சங்கள் வீரியம் இழந்து தொழிலாளர்கள் உரிமைப் போராட்டங்கள் வலுவிழந்தும் வீழ்ந்து வருவதை அனுபவத்தில் பார்க்கின்றோம். முதலாளித்துவம் நவீன தோற்றங்களின் ஊடாக உலகிலே வியாபித்து நிற்கின்றது. உலகப் பொருளாதாரக் கட்டமைப்பிலும், தத்துவார்த்தப் போக்கிலும் சீர்குலைவுகள் தோன்றியுள்ளன.

அதற்குக் காரணம் உலகம் முழுவதும பொருளாதாரக் கட்டமைப்பில் உலகமயமாக்கல், சந்தைப் பொருளாதாரம், தனியார் மயமாக்கல் என்னும் நவீன முதலாளித்துவப் பொருளாதாரச சித்தாந்தம் செல்வாக்குப் பெற்று அரசு ஆட்சிகளையே தீர்மானிக்கும் சக்தியாக மாறிவருவதே ஆகும். இதனால் வல்லாண்மை நாடுகளும் வளர்ந்த நாடுகளுமே உலகில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

வளர்முக நாடுகளும் அபிவிருத்தி குன்றிய நாடுகளும் மொத்தமாக பாதிக்கப்படுவதுடன் மோசமான சுரண்டல்களுக்கும் சொந்த நாட்டு மூலவங்களையும் உழைப்பையும் மலிவாக இழந்து

(14 ஆம் பக்கம் பார்க்க)



## VACANCIES

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 21[st] May 2004. for the post of Manager for Media Resources and Training Centre (On Contract) for one year.

Salary: Rs.15,000/- per month fixed.

Qualifications: BBA/B.Com. Degree of a recognised University with adequate administrative experience.

▲ Preference will be given to those who have knowledge in Media Resource and in Computer literacy.

Selection: By Aptitude Test and Interview

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar /Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a money order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelope 23x30 cm in size.

Applicants from the University System/Government Department/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

Registrar,
University of Jaffna.
Sri Lanka.
2004.04.29 (சி-34815)(13-36-34)

## A/L 2006 புதிய பிரிவு

பொருளியல் S.வரதராஜன்
ஆரம்பம்: 02-05-2004

| பொருளியற் கல்லூரி | | BARATHY |
|---|---|---|
| யாழ்ப்பாணம் ஞாயிறு 10.00 (ப.நே) | இணுவில் ஞாயிறு 4.00 (ப.நே) | சித்தன் கேணி ஞாயிறு 1.00 (ப.நே) |

(31484)(43-11-16-36)

## நல்லூர் வணிகர் கழகம் இரவுப் பாதுகாப்பு ஊழியர்கள் தேவை

நல்லூர் வணிகர் கழகத்திற்கு இரவுப்பாதுகாப்பு ஊழியர்கள் உடனடியாகத் தேவை. 05.05.2004 இற்கு முன் காலை 9.00 இற்கும் 5.00 இற்கும் இடையில் நேரில் சமுகமளிக்கவும்.

இடம்: தலைவர் ந.வ.க. "தர்சினி களஞ்சியம்",
இல.56, ஆடிய பாதம் வீதி,
கல்வியங்காடு.

ச.பிறேமதாசன்.
(31474)(37-11-16) செயலாளர், நல்லூர் வணிகர்கழகம்.



## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் மைந்தனும்,
எமது கல்லூரி விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்
திரு.மு.நடராசா அவர்களது மைத்துனனுமாகிய
**கந்தையா சற்குணேஸ்வரன்** (குணேஸ்)
அவர்கள் காலமான செய்தியறிந்து, ஸ்கந்தா சமூகம்
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி,
சுன்னாகம். (31476)(43-11-16-36)

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.



உலகப்புகழ் பெற்ற தரமான **PI, PII, PIII,** Lap Top (TOSHIBA) கணனிகளை மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்!

**PI-200MHz/1.6GB/32Ram - 12, 900/=**
(மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு)
**PII-366MHz/6GB/64Ram - 21, 100/=**
(with Multimeedia)
**PIII-550MHz/8GB/128Ram - 32, 000/=**
(with Modem and Multimeedia)
**Lap Top (TOSHIBA)** கணனிகள்
Intel Celeron 600 MHz/128 Ram/6 GB - 50, 000/=
(with 56kbps Modem)
**BRAND NEW COMPUTERS**
PIV 1.8GHz/128MB Ram/40GB HDD - 52, 000/=
PIV 2.8GHz/256MB Ram/40GB HDD - 62, 900/=
PIV 2.0GHz/256MB Ram/40GB HDD - 54, 000/=
AMD Ation 2.0GHz/128MB Ram/40GB HDD - 46,000/=
(15"Monitor 52xCD Rom, M/M Speakers Keyboard, Mouse and Pad)

விசேட விலை UPS-Powertree 4,200/=




**NORTH EAST TECHNOLOGIES**
34, Saddanathar Road, Nallur, Jaffna.
T.P.:021-2223786, 0777-708498 (hotline)

(C/34821)(36-11-16)

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(18)


நிறைஞ்சனாஸ் சங்கானை
M.G.R (இருவேடம்)
லதா, மஞ்சுளா, நம்பியார்
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு (பு.நே.)
DO NOT DISTURB
(சி34420)(12)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும
ரஜனி, மீனா நடித்த முத்து
நாளை முதல்
இந்தியாவிலும்
இலங்கையிலும் ஒரேதினத்தில்
விக்ரம், ஜோதிகா, கபாலி,
வடிவேல் நடித்த




காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 9.30 (பு.நே.)
(சி34180)(12)

லக்சுமி இணுவில்
சிம்பு, த்ரிஷா நடித்த
அலை



மே 6 முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு



சூர்யா (2 வேடங்கள்), ஜோதிகா
மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்
பேரழகன் (ரீல்ஸ்)
தினசரி 4 காட்சிகள்

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த



6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(22)

## யாழ்.நகரில் புதிய அழகியல் கலையினை பயில பெண்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள
கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின்
அழகியல்துறை நிபுணர்
திருமதி லலித்தா கே.அளவத்தவினால்

அண்மைக்காலங்களில் அதிகம் பிரபல்யம் பெற்று வரும் நவநாகரிகத்துக்கு ஏற்ற வகையிலான சில தொழிற்பயிற்சிகள் யாழ். நகரிலும் ஆரம்பமாகவுள்ளன.

ஏற்கனவே சாவகச்சேரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இப் பயிற்சி நெறியானது அநேக மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். சமூக செயற்பாட்டுமைய பிரதான மண்டபத்தில் 03.05.2004 திங்கட் கிழமை முதல் நடைபெறவுள்ளன. பயிற்சி நேரம் 9 மணி தொடக்கம் 5 மணிவரை

★சாறி, சாறி பிளவுஸ், பஞ்சாபி, சட்டை வேலைப்பாடுகளுக்கான பயிற்சிகள்.
**03.05.2004 - 07.05.2004**
★ முத்து ஆபரண வேலைப்பாட்டுப் பயிற்சிகள்
**08.05.2004 - 12.05.2004**
★ துணியாலான பொம்மைகள் செய்வதற்கான பயிற்சி
**13.05.2004 - 17.05.2004**
★ பூ அலங்காரமும், ஒழுங்கமைப்பும்
**18.05.2004 - 22 05.2004**
★ தலைமுடி அலங்காரம்
**23.05.2004 - 25.05.2004**

மேற்படி நாள்களில் இப்பயிற்சிகள் இடம்பெறும். மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளை 02.05.2004 இற்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுங்கள்.

★ பயிற்சி நிறைவில் போட்டிகள் நடத்தி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-ஜெசாக்
159, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொ.இல.222.3699 (சி-34820)(36-11-16)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லையம்பலம் நாகம்மா

சேச் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் நாகம்மா அவர்கள் நேற்று (29.04.2004) வியாழக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தில்லையம்பலத்தின் பாசமிகு மனைவியும் நாகேஸ்வரி, மகேஸ்வரி (கனடா), நல்லநாயகி, மனோன்மணி, சண்முகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பாக்கியநாதன், பிறின்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலச்சந்திரன், பாலகுமார், பாலகணேஸ், தேவிகா, பாலகிருஷ்ணன் (கனடா), காலஞ்சென்ற ராதாகிருஷ்ணன் மற்றும் ராமகிருஷ்ணன் (கனடா), திருமதி வாசுகி ஸ்ரான்லி (கொழும்பு) , கோபாலகிருஸ்ணன், (கனடா), தாரணி, கவிதா, வினோத், சுதர்சினி, மீரா, வேஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-மகள்
தில்லையம்பலம் நல்லநாயகி (குழந்தை)

சேச் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (31475)(38-11-16-36)

### திருமதி சிவாஜினி செல்லத்துரை

(விவாகப் பதிவாளர், திருநெல்வேலி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாஜினி செல்லத்துரை அவர்கள் (28.04.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலரத்தினம் - மதிவதனநாயகியின் அன்பு மகளும் ஆறுமுகம் - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் செல்லத்துரை (சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும் மதன் (தரம் 11 மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) அவர்களின் தாயாரும் காலஞ்சென்ற கணேசானந்தன் மற்றும் ரதிதேவி, நந்தகுமார் (இலங்கை வங்கி தலைமை அலுவலகம்) ஆகி யோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2004) வெள்ளிக்கிழமை காலை 11மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி. (31475)(38-36-11-16)

தகவல்-
கணவர், மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுச்சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவை நேரத்தில் மே தினமான நாளை மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என நெடுந்தீவு பலநோ.கூ.சங்கத் தலைவர் த.கோபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இதன்படி நெடுந்தீவில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் படகு நாளை மட்டும் பிற்பகல் ஒரு மணிக்குப் புறபபடும் என்றும் -

அதேபோல் குறிகாட்டுவானில் இருந்து மாலை 4 மணிக்கு நெடுந்தீவு நோக்கிப் புறப்படும் படகு இரண்டு மணி நேர தாமதத்தின் பின்னர் மாலை 6 மணிக்கு நெடுந்தீவு நோக்கிப் புறப படும் என்றும் கூறப்பட்டது. (எ)

# தமிழரின் சுய நிர்ணயத்தை...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நிலையை அடைந்து வருகின்றன. பொருளாதார அடிமைத்தனத்தில மூழ்கிக் கொண்டிருக்கின்றன.மொழி இனத் தனித்துவ அடையாளங்களும் சீர்குலைவது மட்டுமல்லாது தொழிலாளா வர்க்கப் போராட்டங்களும் தேசிய இன விடுதலைப்போராட்டங்களும் கூட வலுவிழந்து வருகின்றன. பின் தங்கிய நாடுகளில் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில்வேலையின்மை, உற்பத்தி வீழ்ச்சி, மூலவளங்கள் பெருமளவு சுரண்டப்படுதல், பற்றாக்குறை, பசி, பட்டினி, நிலையற்ற ஆட்சியமைப்பு, உலக பண்டங்களில் உற்பத்திதிறன், தரத்துடன் சந்தையில் போட்டியிட முடியாத அபாயம் என்பன நவீன முதலாளித்துவ பொருளாதார அடிமைத் தனத்திற்கு எதிராகவும் போராட்டங்களையும், யுத்தங்களையும் தோற்றுவிக்கும் காரணிகளாகிவிடுகின்றன.

இப்பின்னணிகளில் இருந்தும் ஏற்பட்டு வருகின்ற நவீன அறிவியல் - தொழில்நுட்ப இராணுவ வளர்ச்சிகளிலிருந்தும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை மதிப்பீடுசெய்ய வேண்டியவர்களாய் உள்ளோம்.

தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்காக.

★உலகின் நவீன பொருளாதார கொள்கைகளுக்கு முகங்கொடுத்து எம் தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும்.

★உலகில் அறிவியல் - தொழில் நுட்ப விருத்தியும் அதனால் நவீன மயப்படுத்தப்பட்டு வரும் ஆட்சியாளர்களின் இராணுவக்கட்டமைப்புகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் வடிவமைக்கப்படவேண்டும். இதன் மூலமே நாம் விடுதலைபெறுவதும், பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் சாத்தியமாகும்.

இதற்குத் தமிழ்த்தேசிய இனம் மேலும் ஒற்றுமையுடனும், பற்றுதியுடனும் மக்கள் விடுதலைக்காக - தமிழ்த்தேச விடுதலைக்காக எத்தகைய ஒரு தியாகத்திற்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருவது தொடரவேண்டுமானால் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த்தேச மக்கள் அளித்த தீர்ப்புக்கு மதிப்பளித்து,

★ "உடனடியாக எங்கள் நிலம் எமக்கு வேண்டும்! எங்கள் வீட்டிற்கு நாம் போகவேண்டும்'' என்னும் மனித குல அடிப்படை உரிமைகளை ஏற்று எம் தமிழ்த் தேசத்தின் உயர் பாதுகாப்பு வலயம் ,கடல் பாதுகாப்பு வலயம் என்பவற்றை அரசும் இராணுவமும் நீக்கி, மக்கள் இயல்பு வாழ்வை தோற்றுவிக்கவேண்டும். எம் நிலத்தில் நாம் வேளாண்மை செய்யவும், எம் கடலில் நாம் தொழில் செய்யவும், எம்நிலத்தில் தொழில் துறைகளை தொடங்குவதற்குமான உரிமை நிலைநாட்டப்படவேண்டும். அகதி வாழ்வுக்கு முடிவு கட்டவேண்டும்

மனிதாபிமான அடிப்படையிலே தமிழ்த்தேச மக்களின் புனர்வாழ்வுக்கும், புனரமைப்புக்கும், சர்வதேச நாடுகள் உவந்தளிக்கும் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்த தமிழ்த்தேசத்தில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டும்.

அந்த நல்லெண்ண நடவடிக்கை ஊடாக, தமிழ்த்தேசத்தில் தமிழ்த் தேசிய இனத்துக்குரித்தான சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் அடிப்படையில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டவேண்டும்.

இதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆட்சியமைத்துவரும் தென்னிலங்கை அரசு உடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

அல்லது தமிழ்த்தேசத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில அவ்வுரிமையைப் பயன்படுத்தி ஆட்சியுரிமையை நிலைநாட்ட திடசங்கற்பம பூணுவோம். அனைவரும் திரண்டு வாருங்கள். எம்முன் உள்ள வரலாற்று கடமையை நிறைவேற்றுவோமென இந்த மே நாளில் அறைகூவி அழைக கிறோம் - என்று அதில் உள்ளது. (எ-4)

# அனலைதீவில் கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இதனையடுத்து பொலீஸ் நிலையத்தில் வைத்து வாக்கு மூலத்தைப பதிவு செய்த பொலீஸார் மீண்டும் நீதிவான் முன் ஆஜர் செய்தனர். இவர்களுடன் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 13 பேரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி என்.ரவிராஜின் உதவியுடன் ஆஜரானார். சந்தேக நபர்கள் 22 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரி அவர் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கின் விசாரணைகள் ஓரளவு பூர்த்தியடைந்து விட்டன. அரசியல் பின்னணி காரணமாக இவர்கள் தேவையற்ற வகையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஸ்ரீகாந்தா நீதிவானிடம் சுட்டிக்காட்டினார். பொலீஸார் பிணை மனுவை ஆட்சேபிக்கவில்லை.

இதையடுத்து சந்தேகநபர்களை தலா 2 ஆயிரம் ரூபா பிணையிலும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சந்தேகநபர்கள் நீதிமன்றப் பதிவாளரிடம் கையொப்பமிடவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

பிணை அனுமதி வழங்கிய பின்னர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா நீதிவானிடம் முறைப்பாடு ஒன்றைத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் சரணடைந்த 9 பேரையும் பொலீஸார் வாக்கு மூலம் பெறுவதற்காக பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச்சென்றனர். அச்சமயம் நீதிமன்றத்துக்கு சமீபமாக நின்ற மூவா சந்தேக நபர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் -

வெளியே வந்தபின் வெட்டிச் சாய்ப்போம் என்று அவர்களில் ஒருவரான முகுந்தன் என்பவர் கூறியுள்ளார். அவர் நீதிமன்றத்துக்குச் சமீபமாகவுள்ள ஈ.பி.டி.பி. முகாமுக்குப் பொறுப்பானவர்.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் சந்தேகநபர்கள் நீதிமன்றத்துக்கு வரும்போது, அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனவே, சந்தேக நபர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் - என்றும் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து சந்தேகநபர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதிருக்க ஏற்பாடு செய்யும்படி நீதிவான் பொலீஸாரைக் கேட்டுக் கொண்டார்.

இவ்வழக்கில் ஊர்காவற்றுறைப் பொலீஸாருடன் சட்டத்தரணி பொன். வெற்றிவேலும் ஆஜராகியிருந்தார். (ஜ-3)


## விக்னா கல்வி நிறுவனம்

O/L பிரிவு 5 DAY CLASS

ஆரம்பம் 3.5.04 (8.30 - 2.00)

★பிரிவு 4 அனுமதிகள் நிறுத்தப் பட்டுள்ளது.

★பிரிவு 6 மிக விரைவில்.

★இவ்வருடம் பிரிவு 6 மட்டுமே

★தூரதேச மாணவர்களின் நலன் கருதி விடுதி வசதிகள் உண்டு.

(C/34682)(38)

## NEW SCIENCE CENTRE
யாழ்நகர்

A/L 2006

"GENERAL CHEMISTRY"
2-5-04 ஞாயிறு 8 a.m.
Sat, Sun. 8 - 9 a.m.

"INORGANIC"
Sat., Sun. 11 - 12
"ORGANIC"
Sat., Sun. 12 - 1

By :- அன்பழகன் B.Sc.

(31466)(38)


# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (எ-4)

# பொலீஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு பிரயோகம் செய்து, துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் அப பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்தக் கலவரங்கள் பற்றிய தகவல் கிடைத்ததும் நுவரெலியா மாவட்ட எம்.பியும், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் பொலீஸ்மா அதிபருடனும், ஜனாதிபதியுடனும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு நிலைமையை எடுத்து விளக்கினார்.

இந்தச் சம்பவங்களுக்கு பொலீஸாரின் அசமந்தப் போக்கே காரணம் என்று தாம் கூறியதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் எனவும் -

உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அவர் உறுதி அளித்தார் எனவும -

சந்திரசேகரன் பின்னர் உதயனுக்குத் தெரிவித்தார். இதேசமயம் இ.தொ.கா.தலைவரும் முன்னாள் அமைச்சரும், நுவரெலியா மாவட்ட எம்.பியுமான ஆறுமுகன் தொண்டமான் நேற்று அதிகாலை 3 மணிக்கு சம்பவம் நடைபெற்ற பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

பின்னர் தமது கட்சியின் ஏனைய எம்.பிக்களுடனும், அப்பகுதியைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்களுடனும், அப்பகுதி மக்களுடனும் அவர் பேச்சுக்களில் ஈடுபட்டார். (எ-க)

# கந்தப் பொலவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவிக்கப்பட்டது. மூன்றாவது நபர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர மேலும் 9 பேர் காயமடைந்திருந்தனர். அவர்களில் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்றுக்காலை சென்.ஜோன்ஸ் எஸ்டேட்டில் ஒருவரும் சந்திரகாந்தி எஸ்டேட்டில் ஒருவரும் சூட்டுக்கு இலககாகி காயமடைந்திருந்தனர்.

கலவர நிலையை அடுத்து உடப்புசல்லாவ வீதியில் ஹாவாஎலிய சந்தியிலிருந்து ஹைபொரஸ்ட் சந்திவரையுள்ள பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது நேற்று இரவும் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தது.

இக்கலவரத்திற்கான காரணங்களை ஆராய்வதற்குத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஸி.வி.இரத்னாயக்கா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கலவரத்தால் பாதிக்கப்பட்ட கந்தப்பொல பகுதியைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று நேரடியாகச்சென்று பார்வையிட்ட பின்னர், நுவரெலியாவில் பிரதமர் இல்லத்தில் அவர் நடத்திய கலந்துரையாடலில் இக்குழு நியமிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

வன்முறை விடயங்கள் குறித்துப் பிரதிப்பொலீஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன தலைமையிலான உயா பொலீஸ் குழு விசாரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கந்தப்பொல கலவரங்களில் உயிரிழந்தோரின் இறுதிக்கிரியைகள் முடிவடையும் வரை அப்பிரதேசத்தில் இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவது என்றும் -

தொடர்ந்து மேதினம், வெசாக் ஆகியவை வருவதால் இந்த மதுபான விற்பனை நிலையங்களை மூடும் நடவடிக்கையை அதுவரை தொடர்ந்து நீடிப்பது என்றும் - அங்கு மேலும் முடிவு செய்யப்பட்டது. (எ-க)


## Dip. in Hardware

Period- 9 நாட்கள் (முழு நேரம்)
Time 09.30 - 16.30

Batch IV
03/05/2004 லிருந்து 13/05/2004

ஒரு குழுவில் 10 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்

01/05/2004 ற்கு முன் பதிவுகளை மேற்கொள்ள

பதிவுகளிற்கு



STP Your Partner in IT Solution

73, Palaly Road, Kanthermadam


# கிழக்குச் சம்பவம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்பட்ட விடயங்கள் எவை?

*பதில்:* புதிய அரசு உருவாகியுள்ள புதிய சூழலில், போர் நிறுத்த உடன் படிக்கையை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அரசின் நிலைப்பாட்டை கண்காணிப்புக்குழுத் தலைவரிடம கேட்டறிந்தோம்.அத்துடன் அண்மைக் காலமாக நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக எமது தலைமையின் கரிசனையை அவரிடம் தெரிவித்துள்ளோம்

*கேள்வி:*பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கின்றார். எனவே என்ன அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்களா?

*பதில்:* இது பற்றிய கருத்துக்களை இப்போது சொல்வது பொருத்தமில்லை. ஏனெனில் நோர்வேயின் தூதுக் குழுவினர் எங்களைச் சந்திக்கவுள்ளனர். அரச தரப்பின் உண்மையான நிலைப்பாடுகளை அவர்கள் அறிந்து வந்து எம்மோடு பேசிய பின்னரே எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளைத் தெளிவாக முன்வைப்போம்

*கேள்வி:* மட்டக்களப்பில் நடந்த படுகொலைகள் தொடர்பாக கண்காணிப்புக்குழு என்ன விசாரணைகளை மேற்கொண்டுள்ளது?

*பதில்:* மட்டக்களப்புச் சம்பவம் தொடர்பாக நாங்கள் கண்காணிப்புக் குழுவுக்கு எமது நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றோம். அதில் முக்கியமாக எங்களுடைய தலைவரது கரிசனையையும் இயக்கத்தின் நிலைப்பாடுகளையும் அவர்களுக்கு கூறியிருக்கின்றோம். அத்துடன் எமது அதிருப்தியையும் தெரிவித்திருக்கின்றோம். ஏனெனில் மட்டக்களப்புச் சம்பவமானது நிச்சயமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில்தான் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் படைத்தரப்பின் ஆதரவோ அல்லது அவர்களுக்கு தெரியாமலோ நடைபெற எச்சாத்தியக கூறுகளும் இல்லை. இச்சம்பவம் யுத்த நிறுத்த மீறலாகவே அமைகின்றதென்ற தலைமைப் பீடத்தின் விசனத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இச்சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை நிலையை விரைவில் வெளிப்படுத்த வேண்டும் என்பதனையும் நிச்சயமாக இப்படியான சம்பவங்கள் இந்த அமைதிச் சூழலை, யுத்தநிறுத்தச் சூழலை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியப்பாடான சூழலைக் குழப்பும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இச்சம்பவம் ஒரு யுத்தநிறுத்த மீறல் என்றும், தாங்கள் இது சம்பந்தமான தீவிர விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர் என்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் என்ற வகையில் தங்களுடைய தீவிர செயற்பாடுகள் தொடர்பாக எமது தேசியத் தலைவரிடம் தெரிவிக்கும்படியும் கண்காணிப்புக்குழுத் தலைவர் எம்மிடம் கூறியிருக்கின்றார். இந்தச் சம்பவம் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அவர் எம்மிடம் தெரிவித்துள்ளார்.

**அமைதியைக் குலைக்கும்**

*கேள்வி:*- மட்டக்களப்பு ஆயித்தியமலைச் சம்பவம் தொடர்பாக அரசுக்கு உங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளீர்களா.?

*பதில* :- எமது கடுமையான ஆட்சேபத்தைக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மூலமாக அரசுக்குத் தெரிவித்துள்ளோம்.

# யுத்தநிறுத்த....

இப்படியான சம்பவங்கள் முழு அளவிலான யுத்த நிறுத்த மீறல் என்பதையும் உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமான அமைதிச்சூழலைத் தொடர்ந்து பேணுவதில் நிச்சயமாகப் பாரிய நெருக்கடியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்பதையும் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். எமது தலைமைப்பீடத்தின் இந்த நிலைப்பாட்டை அரசுக்குத் தெரிவிக்கும்படி கண்காணிப்புக் குழுத் தலைவரைக் கோரியுள்ளோம்.

*கேள்வி:* ஐ.தே.கட்சி சமாதான முயற்சிகளை முன்னெடுத்தற்கு எதிராக சந்திரிகா குரல் எழுப்பினார். இப்போது அவர் இதய சுத்தியுடன் பேச்சு நடத்துவார் என நீங்கள் நம்புகிறீர்களா?

*பதில்:*பேச்சுக்கள் இதய சுத்தியோடு நேர்மையாக நடக்கும் என்ற எதிர்பார்ப்புக்களை விட, நடக்கப் போகும் காரியங்களை வைத்துக் கொண்டு நாம் முடிவுகளை எடுப்பது தான் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

கடந்தகாலங்களில் நடந்த சமாதான முன்னெடுப்புத் தொடர்பாக ஜனாதிபதி விமர்சனங்கள் தெரிவித்திருக்கிறார். புதிய சூழலில் மக்களின் ஆணையின் அடிப்படையில் எப்படிச் செயற்படப்போகிறார் என்பதை வைத்துக் கொண்டு அந்தச் சூழலில் எமது முடிவை எடுப்பது பொருத்தமாக இருக்கும். இப்போது எதிர்வு கூறுகளை வெளிப்படுத்துவது, சமாதான முன் னெடுப்புக்களில் பாதிப்புக் களைக் கொண்டுவரும் என்பதால் இப்போது அதைப்பற்றிக் கூறுவது பொருத்தமல்ல- என்றார். (ஐ-எ-3-ரி)

# ஜூன் இறுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார் என்றும் யு.என்.ஐ.தெரிவித்தது.

"சுமார் ஒரு வருட இடைவெளிக்குப் பின்னர் ஆற அமர இப்போது பேச்சு ஆரம்பிக்கப் போகிறது"- என்றும் கதிர்காமர் கூறினார்.

இலங்கை சமாதானப் பேச்சை முன்னெடுப்பது தொடர்பாக இலங்கை அரசின் வழிகாட்டித்திட்டம் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கவே ஒருநாள் பயணமாகத் தான் இந்தியா வந்தார் என்றும் கதிர்காமா கூறினார்.

முன்னைய அரசின் இரண்டு ஆண்டு கால சமாதான முயற்சிகளில நல்லமுன்னேற்றம் காணப்பட்டதா என்று கேட்டதற்கு "அதிகம் இல்லை" என்று பதிலளித்தார் கதிர்காமர் என யு.என்.ஐ. மேலும் தெரிவித்தது.

கதிர்காமர் தெரிவித்த தகவல்களை வெளியிட்ட யு.என்.ஐ. தனது கருத்தாகவும் சில விடயங்களை அச் செய்தியில் வெளியிட்டது. முதலாவதாக -

புலிகள் தனிநாட்டையா, தன்னாட்சியையா, சமஷ்டிக் கட்டமைப்பையா - எதைக் கோருகின்றார்கள் என்பது பற்றிய அடிப்படை விடயங்கள் குறித்து பேசுவதில் முன்னைய அரசு சிரத்தை எடுக்கவில்லை.

மேற்படி முயற்சிக்கான தெளிவான வழிகாட்டித் திட்டம் இல்லாததாலும், புலிகளின் கடுமையான பேரம் பேசும் இராணுவப் பலத்தாலும் அந்தப் பேசசுக்கள் முறிவடைந்தன. - இப்படி யு.என்.ஐ. தனது கருத்தாகச் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-7-ரி-4-க)

# கலவரப் பகுதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்களை முன்வைத்தார்.

எனினும், அக்கூட்டத்தில் பிரதமா கலந்துகொண்டு புறப்பட்டுச் சென்ற பின்னரும் கூட கூட்டத்தில் சுமுகமான இணக்கநிலை ஒன்று எட்டப்படவில்லை.

கந்தப்பொல நகரப்பகுதியில் ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் பொலீஸ காவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. அது அமைக்கப்பட்ட பின்னரே - தமிழர்கள் அதிகமாக வாழும் கந்தப்பொலப் பகுதியில் - இனப்பதற்றம் உருவானது என்று நேற்றைய கூட்டத்தில் தமிழர்தரப்புப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இந்த பொலீஸ் காவல் நிலையத்தை அகற்றாவிட்டால் பதற்றம் குறையாது; குழப்பநிலை நீடிக்கும் என அவர்கள் வற்புறுத்தினர்.

இணக்கநிலை ஏற்பட வேண்டுமாயின், முதலில் பொலீஸ் காவல் நிலையம் அகற்றப்படும் என்ற ஒரு முடிவு எட்டப்பட வேண்டும் என்பதில் அவர்கள் விடாப் பிடியாக இருந்தனர்.

நகரத்திலும் சுற்றாடலிலும் பதற்றம் ஒரு புறம் நீடிக்க, விட்டுக்கொடுக்காமல் இழுபறியுடன் கூட்டம் நேற்றுப் பிற்பகல்வரை தொடர்ந்தது.

பின்னர் மாலையிலும் கூட்டம் நடைபெற்றது. எனினும் தீர்க்கமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை. (எ-ரி-7)

# உயர் பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் கண்காணிப்பாளர் நாயகம் டெனிஸ் மக்கன்மாரா.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் இங்கு இரண்டு வாரம் தங்கியிருந்து உள்நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகள் குறித்து - குறிப பாக யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த அகதிகள்விடயம் குறித்து - விரிவாக ஆராய்ந்தார்.

தமது விஜயத்தின் இறுதியில் நேற்று செய்தியாளர் கூட்டம் ஒன்றில் அவர் கருத்து வெளியிட்டார். அங்கேயே மேற்கண்ட தகவலை அவர் முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

பாதுகாப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை காத்திருக்கும்படி இடம் பெயர்ந்த மக்களைக்கோருவது நியாயமற்றது.

இந்த மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையே அவசியம்உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்ததுவதில் உயர் பாதுகாப்பு வலயம் ஒரு தடையாக இருக்கமுடியாது - என்றார் அவர். (எ-க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org